
மாலை 49 மணி 3 ஏப்ரல் 2007 விலை ரூ10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு

## முத்திரை பதித்திடும் மதுரை சித்திரைத் திருவிழா





# அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில், வீரபாண்டி
## தேனி வட்டம் மற்றும் மாவட்டம்
போன் - 04546-246242

மயூர குக்குட வ்ருதே மஹாசக்தி தரேனகே
கௌமாரீ ரூப ஸம்ஸ்தானே நாராயணீ நமோஸ்துதே
- கௌமாரி துதி

பேரன்புடையீர்,

வளம் கொழிக்கும் முல்லையாற்றினைக் கடந்தவுடன் தேனி - குமுளி செல்லும் சாலையில் கன்னித்தெய்வமாக கௌமாரி அம்சம் கொண்டு வீரபாண்டியில் சுயம்புவாக பக்தர்களுகது வேண்டுவதை ஈபவளாக காட்சியளிக்கும் அன்னை கௌமாரியம்மனுக்கு சித்திரை பெருந்திருவிழா சர்வஜித் ஆண்டு சித்திரை 04ம் தேதி 17.4.2007 கொடியேற்றத்துடன் தொடங்கி வைகாசி 1ம் தேதி 15.05.2007 செவ்வாய் கிழமை முடிய நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ளவாறு மிகச்சிறப்பாக நடைபெறவுள்ளது.

தேனி மாவட்டத்தில் இத்திருக்கோயில் திருவிழா மிகவும் பிரசித்தி பெற்றதாகும். இத்திருவிழாவில் அம்மனுக்கு முல்லையாற்றில் பக்தி பெருக்கோடு நீர் எடுத்து வந்து கோயில் வளாகத்தில் நிறுவப்பெற்றுள்ள முக்கொம்பில் நீரை பக்தி பெருக்கோடு ஊற்றி இரவு பகல் என்று பாராமல் ஆண் பக்தர்களும், பெண் பக்தர்களும் எவ்வித பேதமுமின்றி அம்மனை குளிர்ந்த நீரால் குளிர வைப்பர். மேலும் பக்தர்கள் அக்னிச்சட்டி எடுத்து நேர்த்திக்கடன் செலுத்துவது இத்திருக்கோயில் திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியாகும்.

திருவிழா முக்கிய சிறப்பு நாட்கள்

| | |
|---|---|
| 17.04.2007 | செவ்வாய் கிழமை கம்பம் கொண்டு வருதல் இரவு அம்மன் கரகத்துடன் கோயில் வீட்டிலிருந்து திருக்கோயிலுக்கு எழுந்தருளல் |
| 18.04.2007 | புதன் கிழமை கம்பம் நடுதல் |
| 08.05.2007 | செவ்வாய் கிழமை மலர் விமானத்தில் அம்மன் ஊருக்குள் இருந்து திருக்கோயிலுக்கு பவனி வருதல் |
| 09.05.2007 | புதன் கிழமை முத்துப்பல்லக்கில் அம்மன் புறப்பாடு |
| 10.05.2007 | வியாழக்கிழமை புஷ்பப்பல்லக்கு |
| 11.05.2007 | வெள்ளிக்கிழமை திருத்தேர் வடம்பிடித்தல் |
| 14.05.2007 | திங்கள் கிழமை தேர் நிலைக்கு வருதல். முத்துச்சப்பரத்தில் அம்மன் திருத்தேர் தடம் பார்த்தல் |
| 15.05.2007 | செவ்வாய் கிழமை ஊர் பொங்கல். |

அன்பர்கள் அனைவரும் வருகை தந்து திருவிழாவில் கலந்து கொண்டு அம்மனின் திருவருள் பெற அன்புடன் வேண்டுகிறோம்.

**திரு.இர.பச்சையப்பன், பி.எஸ்சி., பி.எல்.,**
செயல் அலுவலர்

**திரு.மா. புகழேந்திரன், பி.ஏ., பி.எல்.,**
தக்கார் - உதவி ஆணையர், மதுரை
(கூடுதல் பொறுப்பு)




# திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2038 சர்வஜித்-சித்திரை
மாலை 49 மணி 4 ஏப்ரல் 2007


## அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

**வணக்கம்.**

ஆண்டுதோறும் மாறி மாறி வரும் பருவ காலத்தின் பின்பனி முடிந்து இளவேனிற் காலமான வசந்த காலம் தொடங்குகிறது. வசந்தம் என்றால் மகிழ்ச்சி என்று பொருள். இக்காலத்தில் மாஞ்சோலை மாமரங்கள் புதிய துளிர் புனைந்து நிற்கும். வேப்ப மரத்தில் வேம்பு மலர்கள் கொத்துக் கொத்தாய் பூத்து நிற்கும். இன்பமும் துன்பமும் கலந்ததுதான் வாழ்க்கை என்பதற்கு இயற்கை வழங்கிடும் எடுத்துவமை இதுவன்றோ. இச்சீரிய வசந்த காலத்தில் வரும் சித்திரா பௌர்ணமி தினத்தன்று தொன்று தொட்டு கொண்டாடப்படும், முத்திரை பதித்திடும் மதுரை சித்திரைத் திருவிழா மிக சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது. சைவ நெறியினரும், வைணவ நெறியினரும் இரண்டறக் கலந்து சிறப்புடன் கொண்டாடப்படும் இவ்விழாவில் நாமும் பங்கேற்று இறையருள் பெறுவோமாக.

அழகர் மலையின் சிறப்புக்களை அடுக்கடுக்கான ஆதாரங்களுடன், அழகாக இவ்விதழில் வழங்கியுள்ளார் டாக்டர் திருமதி ராதா தியாகராஜன் அவர்கள்.

முருகப் பெருமானின் வேலின் சிறப்புக்களை, கந்தபுராணம், கந்தரனுபூதி, திருவண்ணாமலை திருப்புகழ் ஆகியவைகளை எடுத்தாண்டு ''வேலெடுத்த பெருமாள்'' எனும் தலைப்பில் தமிழாகரர் தெ. முருகசாமி அவர்கள் தனக்கே உரிய பாணியில் வழங்கியுள்ளார்.

உலகியல் வழக்காறுகளை தமது அருட்பாக்கள் மூலம் பதிவு செய்து தமிழர்க்கு தந்து சென்றுள்ள தாயுமானவரின் உலகியல் பார்வையினை மிக அழகாக வடித்துத் தந்துள்ளார் முனைவர் வேலூர் ம. நாராயணன் அவர்கள்.

இயற்கையிலும், இறைவனை வழிபடுவதிலும், புதிய சிந்தனைகளைக் கமழவிட்டு, தமிழ் வளர்த்த, திருஞானசம்பந்தரின் தமிழுணர்வையும், இறையுணர்வையும், இசைவுணர்வையும், ''தமிழ் ஞானசம்பந்தர்'' எனும் தலைப்பில் தந்துள்ளார் பேராசிரியர் முனைவர் ச. கணபதி ராமன் அவர்கள்.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற ஆன்மீகத்தென்றல், அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் அருளுரைகள் நம் நெஞ்சில் நிலைத்திருந்தாலும், இன்றைய சமுதாயம் தெரிந்து கொள்ள நினைவலைகள் எனும் தலைப்பில் சுவாமிகளின் ''கந்தபுராண நுண்பொருள் உரை'' செஞ்சொல் உரைக்கோவை நூலிலிருந்து எடுத்து இவ்விதழில் வெளியிடப்பட்டுள்ளது. இது தொடராக வெளிவரும்.

குருகூர் நம்பிக்கு அன்பரான மதுரகவியாழ்வாரின் சிறப்புகளும், திருநீலகண்ட நாயனாரின் சிறப்புகளும் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன.


தென்திருப்பதி எனப்போற்றப்படும் திருமலை வையாவூர் அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலின் புராணச் சிறப்புகளும், உத்தரகோசமங்கை மற்றும் பனையபுரம் பனங்காட்டீஸ்வரர் திருக்கோயில் சிறப்புகளும், திருநாராயணபுரம் அருள்மிகு வேத நாராயணப் பெருமாள் திருக்கோயில் சிறப்புகளும் திருத்தல உலாக்களாக வெளியிடப்பட்டுள்ளன.

அன்பர்கள் அனைவரும் திருக்கோயில் இதழினைப் படித்து இன்பமுற அன்புடன் வேண்டுகிறேன்.

அன்புள்ள

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
சிறப்பு ஆணையாளர்
மற்றும் ஆணையாளர்


**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,**
**119, உத்தமர் காந்தி சாலை,**
**சென்னை - 600 034.**



# அறச்செயலின் பயன்

## மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்

சாலையில் பல்லக்கு ஒன்றைச் சிலர் தூக்கிக்கொண்டு நடந்தனர். பல்லக்கில் ஒருவர் சாய்ந்தவாறு சாலையின் இருமருங்கிலுமுள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்தவாறு பயணம் நடத்திக் கொண்டிருந்தார். கழுத்து வலியெடுக்கவும் கால் கொப்பளிக்கவுமான நிலையில் பல்லக்குத் தூக்கிகள் தங்கள் பணியினை ஆற்றிக் கொண்டிருந்தனர்.

இரண்டு முதியவர்கள் இந்தக் காட்சியை ஒரு மண்டபத்தில் இருந்தவாறு கண்டனர். அவர்களில் ஒருவர் தமிழ் நூல்களை நிரம்பப் படித்தவர். அவர் சொன்னார். ''பார்த்தீரா? இதுதான் பாவம் செய்த ஜென்மத்திற்கும் புண்யம் செய்த ஜென்மத்திற்கும் சரியான எடுத்துக்காட்டாகும்'' என்று! அவருடன் இருந்த முதியவர், ''எப்படி? எப்படி?'' என்று ஆவலுடன் கேட்டார். தமிழ் படித்த முதியவர் கூறினார் விளக்கமாக!

''திருக்குறளில் வள்ளுவர் இதுபற்றி மிகச் சிறப்பாகச் சித்தரித்துள்ளார். அறத்தினால் ஏற்படும் பயன் என்னவென்று நூல்களைக் கொண்டு ஆராயத் தேவையில்லை. பல்லக்கில் செல்பவனையும் பல்லக்குத் தூக்குபவனையும் பார்த்தாலே அவர்களில் அறஞ்செய்தது யார் என்று புரிந்து விடும். ஒருவர் செய்த அறத்திற்கு ஏற்ப அவர் பல்லக்கில் ஏறுகிறார். அறம் செய்யாதோர் பல்லக்கைச் சுமக்கிறார்.''

இவ்வாறு படித்த முதியவர் விளக்கம் கூறிக் கொண்டிருந்தபோது, ''என்னே கொடுமை! என் குறளையே குழிதோண்டிப் புதைக்கிறீர்களே'' என ஒரு குரல் கேட்டது. இரு முதியவர்களும் வியப்புடன் திரும்பிப் பார்த்தனர். வள்ளுவர் கண்கலங்க நின்று கொண்டிருந்தார். முதியவர்கள் அவருக்கு வணக்கம் தெரிவித்தனர்.

பதிலுக்கு வள்ளுவர் அவர்களை வணங்கிவிட்டு, ''நான் எழுதிய குறளுக்கு இப்படி ஒரு பொருந்தாத உரை கண்டது யார் என்றே எனக்குத் தெரியவில்லையே! முதியவர்களே! பல்லக்குச் சுமப்போரையும் பல்லக்கில் செல்வோரையும் வைத்து நான் பாடிய குறளுக்கு நீங்கள் உரைத்தது சரியான பொருள் அல்ல! பல்லக்கில் ஏறியவன் அறச்செயல் புரிந்தவன் என்றோ, பல்லக்கைச் சுமப்பவன் தீச்செயல் புரிந்தவன் என்றோ நான் கருத்தறிவிக்கவில்லை. அது அறிவுக்கு ஒவ்வாத ஒன்றாகும். அற வழியில் நடப்பவர்கள் பல்லக்கில் செல்பவனைப் போல வாழ்க்கையில் வரும் இன்ப துன்பங்கள் இரண்டையும் எளிதாகக் கருதிப் பயணத்தைத் தொடர்வர். தீய நெறிக்கு தங்களை ஆட்படுத்திக் கொண்டவர்களோ பல்லக்கைத் தூக்குகிறவர்களைப் போல இன்பத்திலும்

அமைதி கொள்ளாமல் அதேசமயம் துன்பத்தையும் தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவமின்றி வாழ்வையே பெரும் சுமையாகக் கருதுவர். இவ்வாறு அறச்செயலின் பயனுக்கு பல்லக்கில் செல்பவனையும், தூக்குபவனையும் உவமை காட்டினேனேயல்லாமல் அவரவர்களின் பாப புண்ணியங்களுக்கேற்ப பல்லக்குச் சுமப்போராகவும், பல்லக்கில் செல்வோராகவும் ஆகிறார்கள் என்று நான் குறிப்பிடவே இல்லை! என்னையும் என் குறளையும் உணர்ந்து கொள்ளாமல் தவறான எண்ணங்களை மக்களிடம் பரப்பாதீர்கள்'' என்று உருக்கமுடன் கேட்டுக் கொண்டார்.

படித்த முதியவர், வள்ளுவரிடம் தன் செயலுக்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டு- இனித் தன்னைத் திருத்திக் கொள்வதாகவும் கூறினார்.

''உம்மைத் திருத்திக் கொண்டால் மட்டும் போதாது. ஊரையும் திருத்துக'' என உரைத்து வள்ளுவர் அவர்களிடம் விடைபெற்றுச் சென்றார். அதற்குள் பல்லக்கு, வெகு தொலைவுக்கு சென்றுவிட்டது.

**''அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை**
**பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.''**

*அதிகாரம்-4 அறன்வலியுறுத்தல் பாடல்-37*

-மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் குறளோவியமாம் தமிழ்க் காவியத்திலிருந்து இக்கருத்தோவியம் நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.

## இதழின் உள்ளே ....


1. அழகர்மலை - மதுரை - டாக்டர் திருமதி ராதா தியாகராஜன் எம்.ஏ., பி.எச்.டி 4
2. வேலெடுத்த பெருமாள் - தமிழாகரர் தெ.முருகசாமி 7
3. தாயுமானவரின் உலகியல் பார்வை - கவிமாமணி முனைவர் வேலூர். ம.நாராயணன் எம்.ஏ., பி.எச்.டி., 10
4. திருமலை வையாவூர் அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில் 14
5. தமிழ் ஞானசம்பந்தர் - பேராசிரியர் முனைவர் ச.கணபதிராமன் 18
6. மாரி இன்ப மாரி - முனைவர் டி.எஸ்.ராமஸ்வாமி 21
7. அதிசய தேவாரத்தலம் - பனையபுரம் அதியமான் 23
8. குருகூர் நம்பிக்கன்பரான மதுரகவியாழ்வார் - பெ.இராமநாதபிள்ளை 26
9. வேலும் மயிலும் துணை - பேராசிரியர் டாக்டர் சரஸ்வதி இராமநாதன் 29
10. திருக்குறட்செல்வர் சொன்னவண்ணம் நின்றவர் - கே.பாலசுந்தரி எம்.ஏ 31
11. கந்தபுராண நுண்பொருள் - வாரியார் சுவாமிகள் - நினைவலைகள் 33
12. உத்தரகோசமங்கை - முனைவர் அறிவொளி 35
13. திருநாராயணபுரம் அருள்மிகு வேதநாராயணப் பெருமாள் 37

# "அழகர் மலை" - மதுரை

டாக்டர் திருமதி ராதா தியாகராஜன்,எம்.ஏ., பிஎச்.டி.

அழகர்மலை என்று அருமையோடழைக்கப்படும் இப்புண்ணியப்பதி, நக்கீரர், பரிபாடல் ஆசிரியர் போன்ற சங்கச் சான்றோர்களாலும், சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகளாலும், ஆழ்வார்களாலும் புகழ்ந்து பாடும் பெருமை படைத்துள்ளது.

இச்சோலை மலையை பழமுதிர் சோலையேன நக்கீரரும், திருமாலிரும் சோலையென்று பரிபாடல் ஆசிரியர்களும், ஆழ்வார்களும் குறிப்பிட்டுள்ளார்கள்.

இதன் இயற்கை வனப்பையும், எழில் நலத்தையும் கண்ட நக்கீரர்,

**''காடும் காவும் கவின் பெறுதுருத்தியும்**<br>
**ஆறும் குளமும் வேறு பல்வைப்பும்,**<br>
**சதுக்கமும் சந்தியும், புதுப்பூம் கடம்பும்,**<br>
**மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்,''**

*(திருமுருக- பழமுதிர் 223 - 226)*

என உள்ளத்தெழுச்சி பொங்கப் பாடுகிறார்.

பரிபாடல் ஆசிரியர், இவ்வியற்கையை வியந்து,

**''சுனையெலாம் நீலம் மலர, சுனைசூழ்**<br>
**சினையெலாம் செயலைமலர காய்கனி**<br>
**உறழ நனை வேங்கை ஒள்ளிணர் மலர,**<br>
**மாயோன் ஒத்த இன்நிலைத்தே''**


*(பரிபாடல் 15 - வரி 30 - 34)*

(அருஞ்சொல் - செயலை- அசோகு)

எனப் பாடி மகிழ்கிறார்.

இம்மலையை **''புலவர் ஆய்பு உரைத்த புனை நெடும்குன்றம்''** என்கிறது பரிபாடல், பாடல் எண் 15 - வரி 4). திருமாலின் உருவ





எழிலைப் புகழ்ந்து பாடுகின்றனர் பரிபாடல் ஆசிரியர்கள்.

**''இருவேறு மண்டிலத்து இலக்கம் போல**<br>
**நேமியும் வளையும் ஏந்திய கையான்**<br>
**கருவி மின் அவிர் இலங்கும் புலம்பூண்**<br>
**அருவி உருவின் அணிந்த நின்**<br>
**திருவரை அகலம் தொழுவோர்க்கு**<br>
**உரிது அமர் துறக்கமும் உரிமைநன்கு''.**

*(பரிபாடல் 13 - வரி 8-13)*

இளங்கோவடிகள் படைத்த சிலப்பதிகாரத்தில் - புகார் நகரைவிட்டுக் கோவலனும், கண்ணகியும், கவுந்தி அடிகளுடன் மதுரைக்கு வரும் வழியில், உறையூரை அடைந்து, அங்கு அவர்கள் கண்ட மாங்காட்டு மறையோனை, கொடும்பாளூரில் இருந்து மதுரைக்குச் செல்லும் வழியை வினவியபோது அவன் கூறுகிறான், இங்கிருந்து மூன்று வழிகள் உண்டு - **''பிறை முடிக் கண்ணிப் பெரியோன் ஏந்திய, அறைவாய்ச் சூலத்து அருநெறிகவர்க்கும், தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்'', அவற்றுள் வலப்பக்கம் சென்றால் சிறுமலைப் பாதை, இடப்பக்கம் உள்ள பாதையில் சென்றால் அழகர்கோவில் எனப்படும் திருமால் குன்றத்தைக் காணலாம்''** என்று கூறுகிறான்- (காடுகாண் காதை 73-75)

**''திருமால் குன்றத்து செல்குவீராயின் -**

**பெருமால் கெடுக்கும் பிலம்உண்டு ஆங்கு''.** பவகாரணி, இட்டசித்தி என்ற பொய்கைகள் இருக்கும். மேலும் இப்புண்ணியப்பதியின் சிறப்பினை விளக்கிக் கூறி, **''அம்மலைமிசைநின்ற மாயனை ஏத்தி இன்பம் எய்தி, மாண்புடை மரபில் மதுரைக்கு ஏகுமின்''** என்றான். (காடுகாண்காதை - வரி 139).

திருமாலிருஞ் சோலைமலை, இதிகாசமாகிய மபாரதத்திலும், புராணங்கள் பலவற்றிலும், இலக்கியங்களிலும் குறிப்பிடப் பெற்றுள்ளதைப் பார்க்குங்கால் திருப்பரங்குன்றம் எவ்வளவு பழமைச் சிறப்பு வாய்ந்துள்ளதோ அவ்வளவு சிறப்பு வாய்ந்துள்ளதாகக் காணப்படுகிறது. இம்மலை மாபாரதத்தில் விருஷாபத்திரி மலையெனக் குறிக்கப் பெறுகிறது. தருமபுத்திரர் வனவாசம் மேற்கொண்டபோது இம்மலையிலுள்ள பெருமானை வணங்கியதாகக் குறிப்புள்ளது. மேலும் அர்ச்சுனன். தீர்த்தயாத்திரை மேற்கொண்டபோது இங்குள்ள புனிதமான சிலம்பாற்றில் குளித்துப் பெருமானை வணங்கியதாகவும் குறிப்புக்காணக் கிடக்கிறது.

**''தீர்த்த முழுவது மாடி அன்பால் தென்பால்**

**திருமலையும் கைதொழுது சிந்தித்தானே''**

(வில்லி பாரதம் - தீர்த்தயாத்திரை பாடல்44)

திருமலை என்பது ''அழகர் மலை'' என உரையாசிரியர்கள் குறிக்கின்றனர். 12-ஆம் பாடலில் திருப்பதி மலை ''அரவக்கிரி'' எனக்குறிக்கப் பெற்றமையால், ''திருமலை'' அழகர்மலையேயாகும்.

வாமன புராணத்தில் இயமன் மார்க்கண்டேயர் வரலாற்றில் அழகரைப் பற்றியும் நூபுரகங்கை பற்றியும் கூறும் குறிப்புள்ளது. பிரமாண்ட புராணத்திலும் வராக புராணத்திலும் அழகர் மலையின் மேன்மை கூறப்படுகிறது. இப்பதி வைணவத் தலங்களில் ஒன்றாகவும் முருகன் ஆற்றுப்படை வீடுகளில் ஒன்றாகிய பழமுதிர் சோலையாகவும் விளங்குகிறது.

மூலவர் பரமசுவாமி எனப் பெயர் பெறுவர். உற்சவர், சௌந்தரராசப் பெருமாள் அல்லது அழகர் என்ற பெயருடன் சித்திரை மாதம் பௌர்ணமி அன்று வைகை ஆற்றில் இறங்குவார். இவ்விழா சிவநெறியினரையும் திருமால் நெறியினரையும் ஒன்றுபடுத்தும் விழாவாக அமைகிறது. மதுரையில் நடைபெறும் திருவிழாக்களில் சித்திரைத் திருவிழாவே மிகச் சிறப்பு வாய்ந்தது. திருமலை மன்னர் காலத்திற்கு முன் கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் விழா மதுரை நகரை அடுத்துள்ள தேனூரில் நடைபெற்றது. திருமலை மன்னர் இவ்விழாவை மதுரையில் கொண்டாட ஏற்பாடு செய்தார்.

இக்கோயிலுக்கு முதன் முதலில் திருப்பணி செய்த பாண்டிய அரசன் மலையத்துவசபாண்டியன் என்பது மரபு வழிவரும் செய்தியாகும்.

ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் 13-ஆம் நூற்றாண்டில் இங்குள்ள திருக்கோயிலின் விமானத்துக்குப் பொன்வேய்ந்து வேறு சில திருப்பணிகளையும் செய்தான்.

விஜயநகர மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் இத்திருக்கோயிலில் பல திருப்பணிகள் நடந்துள்ளன.

திருமலை நாயக்க மன்னர் 17- ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பல திருப்பணிகள் செய்துள்ளார்.




தொன்மைச் சிறப்பு வாய்ந்த இச்சோலைமலை நம் இந்து சமய ஒருமைப்பாட்டுச் சின்னமாகத் திகழ்கின்றது. மலையடிவாரத்தில் அழகர் பெருமானும், மலைமீது முருகப்பெருமானும் எழுந்தருளி யிருந்து அன்பர்களுக்கு அருள் பாலித்து வருகின்றனர். சிவநெறியினர் திருமாலைச் சக்தி வடிவாகக் கொண்டு வணங்குவர் ''அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாரனார்க்கே'' என்று அப்பர் பெருமான் அருளுவர். திருப்புகழில் முருகப் பெருமான் மாயனது மருமகனாக உரைக்கப்பட்டுள்ளான். முருகனை வைணவரும் வணங்குவர். இங்கு இம்மலைதான் தமிழ்நாட்டில் சைவ வைணவ ஒற்றுமையை எடுத்துக் காட்டுகிறது. தில்லையில் கோவிந்தராசப் பெருமாளும், நடராசப் பெருமாளும் இருந்து அன்பர்க்கு அருள்பாலிப்பது போல இப்புண்ணியப்பதி இலங்குகின்றது. மற்றொரு சிறப்பு இக்கோயிலில் திருநீற்றுப் பிரசாதமும் கொடுக்கப்படுகிறது. எனவே நம் இந்து சமயம் தழைத்து ஒற்றுமையுடன் ஓங்க இப்புண்ணியப்பதி ஒரு அடையாளச் சின்னமாக இருக்கின்றதென்றால் அது புனைந்துரையும் அன்று, புகழுரையும் அன்று உண்மை உரையேயாகும். இதனை நினையுந்தோறும் என் உள்ளம் பெரிதும் மகிழ்ந்து இன்புறுகிறது. வடக்கில் வேங்கடமலையெனப்படும் திருப்பதி எவ்வாறு சைவ வைணவப் பெருமக்களுக்குப் பெருஞ்சிறப்புடையதோ தெற்கில் அவ்வளவு சிறப்புடையது அழகர்மலையேயாகும்.



ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னம் இடைக்காடர் என்பவரால் இங்கு ஒரு மருத்துவமன்றம் மிகவும் சிறப்புடன் விளங்கியதாக ஊசிமுறி என்னும் தொன்மையான நூல் கூறுகிறது.

எனவே சோலைமலை உடற்பிணி தீர்க்கும் இடமாகவும், உயிர்ப்பிணி தீர்க்கும் திவ்வியப்பதியாகவும் விளங்குகிறது. அந்நிலை மீண்டும் மலர்ச்சி பெற வேண்டும். இங்கு மலையிருப்பதால் சித்த மருத்துவக் கல்லூரி அமைக்கும் வாய்ப்புள்ளது. அத்தகைய வாய்ப்பு அழகர் பெருமான் திருவருளாலும் முருகப் பெருமான் திருவருளாலும் ஏற்படுத்தப்படும் என எண்ணுகின்றேன்.

இங்கு கட்டப்பட்டுள்ள விடுதிகள், சைவ வைணவ அன்பர்கள் வந்து தங்கி இருபெருந் தெய்வங்களையும் பரவிப் போற்றி வாழ்வு நலன்களைப் பெற வாய்ப்பாக அமைந்துள்ளன. அரசியல் வாயிலாகவும், மொழிவாயிலாகவும் சாதிகள் வாயிலாகவும் பிளவுபட்டுள்ள நாம் சமயத்தின் வாயிலாக ஒற்றுமை பெற்றாலன்றி நம் கலை, நாகரீகப் பண்பாடுகளைக் காப்பாற்றி வாழ முடியாது. சமயமே நம்மை ஒன்று படுத்தி ஆன்ம நேய ஒருமைப்பாட்டை உள்ளபடித் தோற்றுவிக்கும்.



# வேலெடுத்த பெருமாள்



தமிழாகரர் தெ.முருகசாமி


வேலென்றதும் நினைவுக்கு வருவது முருகப் பெருமானுடைய தோற்றம். வேலே விளங்குகையான் என அருணகிரிநாதர் முருகனது தோற்றத்தைக் கந்தரலங்காரத்தில் கூறுகிறார். அந்த வேல், அடியார்களைக் காக்கக்கூடியது என்பதால், வேலும் திருக்கையும் உண்டே நமக்கொரு மெய்த்துணையே என்றும் கூறினார்.

வீரத்தின் அடையாளம் வேல். வேலொடு நின்றான் என்பது வள்ளுவர் வாக்கு (552) இப்படி வேலேந்தும் வீரர்களைப் போலவே முருகனும் வீரத்தின் அடையாளமாக வேல் ஏந்தினாலும், இருவரின் வேல்களுக்கும் வேற்றுமை உண்டு. வீரரது வேல் அழிவுக்கு மட்டுமே பயன்படும். முருகனது வேல் ஆக்கத்திற்கும் பயன்படுவது. வேல் எப்போதும் வீரரது கையிலே இருப்பதில்லை. ஆனால், முருகன் எப்போதும் வேலை ஏந்தியே இருப்பான். வெற்றி தரும் வேலை வீரர்கள் தெய்வமாகக் கொண்டாடினாலும் வீரரும் வேலும் தனித்தனியானவர்கள். முருகனைப் போலவே அவனது வேலும் தெய்வத் தன்மையுடையதால் முருகனும் வேலும் ஒன்றானவர்கள். முருகனுக்குள்ள ஆறுமுகம் வேலுக்கும் உண்டு.

வீரத்தில் வீரம் இல்லாமல் வேலுக்குத் தனிச் சிறப்பில்லை. பக்திமார்க்கத்தில் முருகனில்லாமல் அவனது வேலைமட்டும் தனியாக வழிபடுவது உண்டு. வேல் கோட்டம் என்றே வேலுக்குத் தனியாகக் கோயில் இருந்த குறிப்பைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. அதனால்தான் சைவ எல்லப்ப நாவலர்,

''தோகைமேல் உலவும் கந்தன்
சுடர்க்கரத் திருக்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலை
வணங்குவது எமக்கு வேலை'' என்றார்.

போரில் எய்யப்படும் வேல் எதிரியின் உடம்பைப் பிடித்துக் கொள்வதால் அதற்கு உடம்பிடி என்ற காரணப்பெயரும் உண்டு. உடம்பில் வேல் பிடித்துக் கொண்டபோது அதைப்பறித்தெடுத்த காட்சியாக வள்ளுவர் மெய்வேல் பறியா நகும்(774) என்றார். இந்த அடிப்படையில் முருகனது வேலுக்கு உடம்பிடி என்ற பெயர் உண்டு என்பதை இலக்கியங்கள் உறுதிப்படுத்துகின்றன. ''கடம்பு சூடி உடம்பிடி ஏந்தி'' முருகன் வந்ததாகக் குன்றக்குரவை மக்கள் கூறுவதாக இளங்கோவடிகள் கூறுகிறார். ''உடம்பிடித் தடக்கையோன்'' எனக் கச்சியப்பர் கந்தபுராணத்தில் குறிப்பிடுகிறார். ஆக உடம்பில் பிடித்துக் கொள்வதால் உடம்பிடி என வேலைப் பொதுப்படக்கூறினாலும் அச்சொல்லை முருகனோடு சார்த்திக்கூறும் போது ''உடம்பிடித் தெய்வம்'' எனத் தெய்வமாகக் கூறுவதைப் போல வீரர்கள் ஏந்தும் வேலைக் கூறுவதில்லை. சூரனை அழிப்பதற்காகச் செலுத்தும் வேலைக் கச்சியப்பர் ''உடம்பிடித் தெய்வம் இவ்வாறுருகெழு செலவில் ஏகி'' என்று கூறுகிறார். இதனால் முருகனது அம்சமாகவே வேலைக் கருதுவதால் உடம்பிடித் தெய்வம் எனப்பட்டது. முருகனுக்கு



நேர்த்திக்கடன் செய்வோர் காவடி எடுத்தல் போலவே அலகு குத்திக் கொள்வதும் உண்டு. வேல்வடிவில் சிறு சிறு ஊசியால் செய்யப்பட்ட கருவிக்கு அலகு என்று பெயர். எனவே, போரில் பயன்படுத்தப்படும் வீரனின் வேலைக் காட்டிலும் முருகனது வேல் தனிச்சிறப்புக்குரியது எனலாம்.

முருகனது வேல் என்பதற்கும், வீரனது வேல் என்பதற்கும் பெரிய வேறுபாடுண்டு. முருகனை விட்டு வேலைப் பிரிக்க முடியாதென்பதால் அது அவனது தற்கிழமைப் பொருள். ஆனால் வேலும் வீரனும் தனித்தனியானவர்கள் என்பதால் வீரனுக்கு வேல் பிறிதின் கிழமையான பொருள். எனது வீடு என்றால் நானும் வீடும் தனித்தனியானவர்கள். எனது கை என்றால் என்னை விட்டுக் கையைப் பிரிக்க முடியாதது போன்றது முருகனது வேல் என்பதாகும். அதனால்தான் முருகனை வேலொடு வணங்கலாமேயன்றி வேலின்றி வணங்கக் கூடாதென்பது ஆன்றோர் அறிவுரையாக உள்ளது.

அருணகிரிநாதர் முருகனது வேலின் சிறப்பை வேல் வகுப்பு, வேல்வாங்கு வகுப்பு என்பதாகத் தனித்தனிப் பாடல்கள் பாடியுள்ளார். மற்றும் பற்பல இடங்களில் வேலைச் சிறப்பிக்குங்கால் அடைமொழி கொடுத்தும், கொடுக்காமலும் பாடுகின்றார்.

**ஆடும்பரி வேல் அணிசேவல் எனப்**

**பாடும் பணியே பணியா அருள்வாய்**

என்ற கந்தரனுபூதிப் பாடலில் மயிலுக்கும் சேவலுக்கும் அடைகூறிய அருணகிரியார் வேலை அடையின்றிக் கூறினார். இவ்வாறே கந்தபுராண ஆசிரியர், தாரகாசூரன் முன்பு முருகன் நிற்பதைக் கூறும்போது,

**முழுமதியன்ன ஆறுமுகங்களும் முந்நான்காகும்**

**விழிகளின் அருளும் வேலும் வேறுள படையின்சீரும்**

**அழகிய கரமீ றாறும் அணிமணி தண்டை யார்க்கும்**

**செழுமலர் அடியும் கண்டான் அவன்தவம் செப்பற் பாற்றோ!**

என்றார். முருகனது எல்லாச்சிறப்பிற்கும் அடைமொழியை முன்னும் பின்னுமாகக் கூறியது போல் வேலுக்கு எந்த அடைமொழியும் கூறப்படாதது சிந்தனைக்குரியது. வேலின் தனித்தன்மையைச் சுட்டவே அடைமொழி யின்றிக் கூறப்பட்டதாகக் கொள்ளலாம்.

முருகனுக்குச் சிவபெருமான் வேலை வழங்கியது பற்றிக்கூறும் கச்சியப்பர்,

**நாயக மாவதொரு தனிச்சுடர் வேல் நல்கியே**

**மதலைக் கை கொடுத்தான்** என்று கூறுகிறார். மேலும், சிவபெருமான் சூரபதுமனுக்கு வரந்தரும்போது,

**தாவிலாத நம்சக்தி ஒன்றேயலால்**

**ஏவர் வெல்பவர் என்று விளம்பி** வரந்தந்தார். இதில் வேலைச் சிவசக்தியாகக் கூறியிருப்பதைக் காணலாம். மேலும் வேலை ஞானத்திற்கு அடையாளமாகக் கூறுவதுண்டு. அறிவானது வேலின் நுனிபோல் கூர்த்தும், அகன்ற நடுபோல் அகன்றும், அடிப்பாகம் நீண்டிருப்பதுபோல் ஆழ்ந்தும், இருக்க வேண்டும் என்பர். எனவே, முருகனே வேலாக, சக்தியாக ஞானமாக இருப்பதால் எந்த அடைமொழியாலும் வேலைச் சிறப்பிக்க வேண்டியதில்லை எனலாம்.

இந்நிலையில் வெல்வது வேல் என்றபடி முருகன் அசுரப்படையை வென்ற போர்வீரன் என்பதால் அவன் வேல் எடுத்த சிறப்பை ஒரே திருப்புகழில் ஒரு முறைக்கு இருமுறையாகப் பாடியுள்ளது சிந்தனைக்கு விருந்தாக உள்ளது. **''கேதகைய பூ முடித்த''** எனத் தொடங்கும் திருவண்ணாமலைத் திருப்புகழில்,

**வேதனையி லேமிகுத்த பாதகனு மாயவத்தில்**

**மேதினியெ லாமுழற்றும்.....அடியேனை**

**வீடுதவி யாளவெற்றி வேல்கரமதே எடுத்து**

**வீறுமயில் மீதிலுற்று.......வருவாயே**

என்ற பாடலின் இடையிலும்,

**சோனை மழைபோ லெதிர்த்ததானவர்கள் மாளவெற்றித்**

**தோளின்மிசைவேலெடுத்த... பெருமாளே** என்று இறுதியிலும் முருகன் வேல் எடுத்த குறிப்பு இருமுறை சுட்டப்பட்டுள்ளன. இங்ஙனம் ஒரே செய்தி இருவேறு வகையாகக் கூறப்பட்டது. ஏன்? எனில் கரத்தில் உள்ளதாகக் கூறியது ஞானம் பற்றிய வேல். தோளில் உள்ளதாகக் கூறியது வீரம் பற்றிய வேல் என்ற வேறுபாட்டை உணரவே அங்ஙனம் கூறப்பட்டது எனலாம்.

முருகன் ஆன்மாவை உலகியல் துன்பத்திலிருந்து நீக்கி வீடுபேற்றைத் தந்து ஆளச் செய்ய வேண்டுமெனில் ஆழ்ந்தகன்ற நுண்ணிய ஞானமாகிய வேலால் அபய கரம் காட்ட வேண்டும். ஆனால், துட்டர்களை அழிக்க வேண்டுமெனில் வீரத்தால் புடைத்த

தோளில் வேலேந்த வேண்டும். முன்னது அகப்பகை. பின்னது புறப்பகை.

ஞானம் வெற்றியன்றி வேறொன்றும் அறியாதென்பதால் ''வெற்றிவேல் கரம்'' எனப்பட்டது. வெல்வது வேல் என்ற அடிப்படையில் வீரத்தின்பொருட்டு எடுக்கப்படும் வேலின் வெற்றி அது சார்ந்த தோளுக்குரியது என்பதால் ''வெற்றித் தோளின்மிசைவேல்'' எனப்பட்டது.

இவ் ஈரிடத்தும் கூறப்படும் எடுத்து, எடுத்த என்ற எச்சச் சொற்களின் பொருள்கள் சிந்திக்கத்தக்கன. எடுத்து என்பது அடியேனுக்கு வீடுபேறு கொடுத்து ஆளவேண்டிவேல் எடுத்து வரவேண்டும் என எதிர்காலத்தில் இறந்தகாலப் பொருள்படப் பாடப்பட்டது. எடுத்த என்னும்போது, எதிர்த்த தானவர்கள் மாள வேல் எடுத்தவன் என்பதால், ''எதிர்த்த அசுரர்களை அழித்தது வேல் எடுத்ததால்'' என்ற இறந்தகாலப் பொருள் தெளிவாகத் தெரிவதால் வினை முடிந்து விட்ட தன்மை தெளிவாகிறது.

இப்படி இருவேறு வகையாகக் கூறியதன் நோக்கம் யாதெனில், புறப்பகையாகிய போர் ஏற்பட்டால் அது ஒரு வகையில் முடிந்து விடலாம். ஆனால், அகப்பகையாகிய அஞ்ஞானப்போர் ஆன்மாவை எப்போதும் மருட்டிக் கொண்டே முடியாப் போராக வெட்ட வெட்டத் துளிர்க்கும் மரம்போல் துளிர்த்துக் கொண்டே இருக்கும் என்பதால் அதை அப்போதைக்கப்போது துளிர்க்க விடாமல் மெய்ஞ்ஞானத்தால் வெட்டிக் கொண்டே இருக்க வேண்டும் என்ற நுட்பத்தை எடுத்து உணர்த்தவே எடுத்து, எடுத்த என இருவகையாகக் கூறப்பட்டது. இதனால் எடுத்து என்ற இறந்த கால வினைச் சொல்லைக் கால மயக்கமாக எதிர்காலப் பொருளுக்குப் பயன்படுத்தியது போல, எடுத்த என்ற இறந்தகாலப் பெயரெச்சச்சொல் இறந்தகாலப் பொருளிலேயே ஆளப்பட்டது சிறப்பிற்குரியதாகும்.

இங்ஙனம் இருவேறுவகையாகப் பொருள் உணர வைக்கும் இப்பாடலின் சொற்பொருளால் நம்வாழ்வின் புறப்பகையை முருகனது வெற்றிவேலாலும், அகப்பகையை அவனது ஞானவேலாலும் வெல்ல கந்தர் சஷ்டி விரதத்தைக் கடைப்பிடித்து நலம் பெறுவோமாக!



28.2.2007 புதன்கிழமை மாலை 6.00 மணியளவில் வேலூர் மாவட்டம், இரத்தினகிரி, கீழ்மின்னல், அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில் அன்னதான மண்டபம் திறப்பு விழா மற்றும் இரத்தினகிரி முருகன் திருப்பள்ளி எழுச்சி இசைக்குறுந்தகடு மற்றும் ஒளிநாடா வெளியீட்டு விழா வெகு விமர்சியாக நடைபெற்றது.

விழாவில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள், இரத்தினகிரி தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள், திருமலைக்கோடி ஸ்ரீ நாராயணி சித்தர பீடம் அருள்திரு சக்தி அம்மா, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திரு.த.பிச்சாண்டி,இ.ஆ.ப., திரு.காந்தி, எம்.எல்.ஏ., திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப. மாவட்ட ஆட்சித்தலைவர் வேலூர், திரு.கோ.பக்கிரிசாமி.பி.எசி., பி.எல்., இணை ஆணையர், இ.ச.அ.ஆ.துறை, வேலூர், திரு.ஆ.வீரபத்திரன், பி.ஏ.,பி.எல்., உதவி ஆணையர் வேலூர், திரு. ஆர்.சோமசுந்தரம், செயல் அலுவலர் மேற்படி திருக்கோயில் மற்றும் ஆன்றோர், சான்றோர் ஊராட்சிமன்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# தாயுமானவரின் உலகியல் பார்வைகள்

கவிமாமணி. முனைவர்.
வேலூர்.ம.நாராயணன்.எம்.ஏ.,பி.எச்.டி.,



அவர் ஓர் அரசு அலுவலர்! அந்நாளைய அரசர் ஒருவருக்கு அரசு நிர்வாகத்தில் வலக்கரமாகத் திகழ்ந்தவர்...! சிறந்த நிர்வாகியென்று நாட்டவரால் பாராட்டப் பெற்றவர். உலகியல் வாழ்வில், அரசரின் வற்புறுத்துதலுக்காக அவர் அந்தப் பதவியில் இருந்தார். ஆனால் அவரது சிந்தையும் செயற்பாடுகளும் எப்பொழுதும் சிவனையும் செழுந்தமிழையுமே நினைத்துக் கொண்டிருந்தன. வடமொழி-தமிழ்மொழி இரண்டிலும் பெரும் புலமை அவர் பெற்றிருந்த போதும், தமிழையும் தமிழில் பாடல்கள் புனைவதையும்தாம் அவர் தம்மூச்சாகக் கொண்டிருந்தார்.

இத்தகு சீர்மிகு சைவப்புலவர் யார் தெரியுமா? திருமறைக்காடு எனும் வேதாரண்யத்தில் பிறந்து திருச்சி மன்னர் விசய இரகுநாத சொக்கலிங்க நாயகரின் அரசவையில் முக்கியப் பொறுப்பில் - அதாவது, இன்றைய அரசு தலைமைச் செயலாளர் எனும் பொறுப்பிற்கு இணையான பொறுப்பில் இருந்தவர். அவர்தாம் தாயுமானவர்..!

கேடிலிப்பரின் மகன். சிவசிதம்பரத்தின் உடன்பிறப்பு, மட்டுவார்க்குழலியின் மணவாளர். கனகசபாபதியின்தந்தை. மௌன குருவின் தலைமைச் சீடர். பின்னாளில் ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகள் கழித்து வேதாரண்யத்தில் தோன்றிய விடுதலைப் போராட்ட வீரர் - நெடுநாள் சட்டமன்ற உறுப்பினர் சர்தார் வேதரத்தினத்தின் ஆறு தலைமுறைக்கு முந்தைய பாட்டனார் என்னும் சிறப்புகளுக்குச் சொந்தக்காரர் தாயுமானவர். கி.பி.1600-ன் தொடக்கத்தில் பிறந்து 1662-தைத்திங்கள் 28- ஆம் நாள் மறைந்தார். இவர்தம் நினைவிடம் இன்றும் இராமநாதபுரத்தில் உள்ளது.

அரசர் மறைந்தார். பிறகு பதவிக்கு வந்த அரசியின் விருப்பத்திற்கு மாறாக. தாமாகவே விருப்ப ஓய்வில் அரசுப் பணியினின்றும் வெளியேறிய தாயுமானவர் திருவூர்கள் பலவற்றிற்கும் சென்று எண்ணற்ற பாடல்களைப் பாடிக் குவித்தார். அவற்றின் தொகுப்பே 'தாயுமான அடிகள் திருப்பாடல்கள்' எனும் பெயரில் நம் இல்லங்களிலும் உள்ளங்களிலும் தவழ்ந்து கொண்டிருக்கின்றது.

சைவப் பாடல்களின் தொகுப்பாக இவர்தம் பாடல்கள் இருப்பினும். பாடல்களின் இனிமை- இலக்கிய நயம்- உவமைகள் - உலகியல் பார்வைகள் அனைத்தும் மாற்று மதத்தாரையும்- மனத்தாரையும் மனங் கொள்ளச் செய்கின்றன என்பதுதான் இவரது பாடற்சிறப்பாகும். இத்தகு சிறப்பு வாய்ந்த 'தாயுமானவரின் உலகியல் பார்வை' இவரது பாடல்களில் எங்ஙனம் பொலிகின்றது என்பதை இங்குக் காண்போம்.

திருமூலர், மணிவாசகர், அருணகிரியார் ஆகிய மூவரிடத்தும் பேரீடுபாடு கொண்டிருந்தார் தாயுமானவர். அதன் தாக்கத்தை இவரது பாடல்களின் கருத்து நிலையிலும் - கலைநிலையிலும்- யாப்பு நிலைகளிலும் நம்மால் நன்றாக உணரமுடிகிறது. தாயுமானவரின் காலம் தமிழகத்தில் வடமொழியும்- இந்துஸ்தாணியும்- உருதும் பெருமளவில் நுழைந்து விட்ட காலம். தமிழோடு கலந்து குழைந்துவிட்ட காலம். விளைவு! தாயுமானவரின் பாடல்களிலும் இத்தகு பிறமொழிச் சொற்கள்- சான்றாக- 'சும்மா', 'சுகவாரி' போன்ற சொற்கள் 'அங்கிங்கெனாதபடி எங்கும்' நிறைந்துள்ளதைக் காண்கிறோம்.

உலகியல் பார்வை என்றால் என்ன? படித்தவர்களிடத்து மட்டும் அன்றிப் பாமரர்களிடத்தும் காணும் பழக்க வழக்கங்கள்- பேச்சு வழக்கங்கள்- பழமொழிகள் போன்றவற்றைப் படைப்பாளர்கள்தமது கலைப்படைப்புகளில் உரிய இடங்களில் பதிய வைக்கின்ற பாங்கு அந்தந்தப் படைப்பாளர்களின் 'உலகியல் பார்வை' எனலாம். இங்கு தாயுமானவர் வெகு மக்களிடத்தே காணுகின்ற குற்றங்குறைகளை யெல்லாம் தமதாகவே ஏற்று, அவற்றைப் பொறுத்தருள்க என இறைவனிடம் வேண்டுகின்றார். அத்தகு இடங்களில்தாம் இவரது உலகியல் பார்வைகள் பளிச்சிடுகின்றன.

நாம் பார்க்கின்றோம்! சிலர் எப்பொழுதும் 'வளவள'வென்று பொருள் ஏதுமின்றிப் பேசிக் கொண்டே இருப்பார்கள்.

அத்தகையோரைப் பார்த்துச் சிலர், 'இவனுக்கென்ன உடம்பெல்லாம் வாயா?' 'சதா பேசிக் கொண்டே இருக்கின்றானே' என்று வியந்து கூறுவார்கள். அத்தகையோர் தாயுமானவர் காலத்திலேயே இருந்திருக்கிறார்கள். அவர்தம் பிதற்றலைத் தமது பிதற்றலாகவே இவர் ஏற்று,

''மௌனமொ டிருந்ததார்? என்போல் உடம்பெல்லாம்
வாயாய்ப் பிதற்றும் அவரார்... அவர்களையும் பொறுத்தருள்க''

என இறைவனிடம் வேண்டுகின்றார்.

தாயுமானவரின் பெரும்பாலான பாடல்கள் இவரது மனத்தை மையமாகக் கொண்டே முன்னிலைப்படுத்தியே பாடப்பட்டுள்ளது. இங்கே ஒரு பாடலில், தன் மனம் எப்படிப்பட்டது எனப் பட்டியலிட்டுக் காட்டுகிறார். அதில் உலகத்து நடைமுறைகளை அழகாகக் கூறுகின்றார்.

- **'என் மனமானது, தொட்டிலில் பிள்ளையை இட்டு ஆட்டும் பொழுதே தொடையையும் கிள்ளிவிடுகின்றது.'**
- **வெற்று வாதங்களில் ஈடுபட வைக்கின்றது.**
- **புருடனுக்கு அடங்காத பெண்கள் சிலரைப்போல ஊரெல்லாம் சுற்றித் திரிகின்றது.**
- **கல்லையும் இரும்பையும்விட வன்மைமிக்கதாக உள்ளது.**
- **காணாததை யெல்லாம் கண்டதாகச் சொல்கிறது.**

இத்தகைய மனதை என்னால் அடக்க இயலவில்லையே.! இதற்கு நீதான் தீர்வு சொல்ல வேண்டும் எங்கும் நிறைகின்ற பொருளே' என்று இறையருளை வேண்டுகின்றார் தாயுமானவர்.

கர்மவினை கோடி எனினும் இறைவனின் கருணைப் பார்வை ஒருமுறைப் பட்டாலும் பட்டுப் போகும். ஆம்! கோடி காக்கைகள் இருந்தாலும் ஒரு கல்லை வீசினால் அவை பறந்து விடும் அல்லவா? என்கின்றார் தாயுமானவர். **'ஆயிரம் காக்கைக்கு ஒரு கல்'** என்பது தமிழ்நாட்டுப் பழமொழி அல்லவா?

**'உள்ளங்கை நெல்லிக்கனி'** என்பது நாம் அறிந்த பழமொழி. நன்கு கனிந்த நெல்லிக்கனியை நம் உள்ளங்கையில் வைத்துப் பார்த்தால் கனியின் உள்ளோடும் நரம்புகள் அனைத்தையும் பளிங்கு போல் நன்கு பார்க்கலாம். அதனால் நன்கு தெரிந்த உலகியல் உண்மைகளை உள்ளங்கை நெல்லிக்கனியோடு ஒப்பிடுவார் சான்றோர் இங்கே தாயுமானவரும்,

**'கைத்தலம் விளங்குமொரு நெல்லியங் கனியெனக்**
**கண்டவே தாகமத்தின்**
**காட்சிபுரு டார்த்தமதில் மாட்சிபெறு முத்தியது'**

என்கின்றார். அதாவது, வேத ஆகமங்களின் உண்மைகள் தெளிவாகத் தெரிவதற்கு உதவும் சச்சிதானந்த சிவமே என்கின்றார்.

மற்றுமொரு பாடலில், அறுசுவை உண்டபின், வெற்றிலைத் தாம்பூலம் சுவைக்கும் பழக்கம் தம் காலத்திருந்ததைப் பதிவு செய்துள்ளார் தாயுமானவர்.

**'விந்தைபெற அறுசுவையில் வந்ததென அமுதுண்ணும்**
**வேளையிலும் மாலை கந்தம்**
**வெள்ளிலை அடைக்காய் விரும்பிவேண்டிய வண்ணம்!**

என்பது அந்தப்பாடல். வெற்றிலையைப் வெள்ளிலை என்று குறிக்கின்றார்.

'தேசோமயானந்தம்' எனும் பகுதியில் 'சித்தமிசைகுடி கொண்ட அறிவான தெய்வமே நிலையானது. ஏனைய

**''தந்தைதாய் தமர்தாரம் மகவென்னும் இவையெலாஞ்**
**சந்தையில் கூட்டம் இதிலோ**
**சந்தேக மில்லைமணி மாடமா ளிகைமேடை**
**சதுரங்க சேனையுடனே**
**வந்ததோர் வாழ்வுமோர் இந்திரசா லக்கோலம்**

என்று அடுக்கிக் கூறுவது இவரது பற்றற்ற துறவு நிலையைப் பறைசாற்றுகின்றது.

அருள் மௌன குருவான இறைவன் இவரைத்தம்பால் ஈர்க்க என்ன செய்தாராம். இவரைப் போலவே இன்னொருவரைக் காட்டி, இவரைத் திருத்தித் தம்பக்கம் ஈர்த்தாராம். இது எப்படி இருக்கிறது என்றால் வேடர்கள் ஒரு மானைக் காட்டி இன்னொரு மானைப் பிடிப்பது போல் உள்ளதென்கின்றார்.

**'ஊண்உறக்கம் இன்பதுன்பம் பேரு ராதி**
**ஒவ்விடவும் எனைப் போல உருவங் காட்டிக்**

கோணறவோர் மான்காட்டி மானை ஈர்க்கும்

கொள்கையென அருள்மௌன குருவாய் வந்து!

என்பது அந்த இனிய பாடல் ஆகும்.

செய்வதையெல்லாம் செய்துவிடுவது. பிறகு மன்னிப்பு வேண்டி இறைவர்க்குக் கற்பூரத் தீபங் காட்டுவது தாயுமானவர்க்கு உடன்பாடல்ல. இவரது உலகியல் பார்வையில் இச்செயல், **'யானையைத் தவறவிட்ட ஒருவன், அதைத் தேடிக் குடத்திற்குள் கைவிட்டுத் துழாவியது'** **போன்றதாகும் என்கின்றார். ''ஒருவனவன் யானைகெடக் குடத்துட் செங்கை ஒட்டுதல்போல்!''** என்பது இவர் வாக்கு.

இறைவனுக்கு வடிவம் ஏதும் இல்லை ஆனால் இந்த உலகில் நாம் காணும் அனைத்திற்கும் உரிய வடிவத்தை வடித்துத் தந்தவன் அவன்தான் என்ற பொருளில், **'வடிவனைத்துந் தந்த வடிவில்லாச் சுத்த வான்பொருளே'** என்கின்றார் தாயுமானவர். நம்மில் பலரும் எடுப்பார் கைப்பிள்ளையாகிச் சுயசிந்தனையின்றியும், ஆடு எங்ஙனம் ஓரிடத்தே நின்று செடியின் தழைகளைத் தின்னாமல் அங்குமிங்குமாக ஓடியும் குதித்தும் அலைந்து திரிந்த வண்ணமாக உள்ளதோ அது போன்றும் எதிலும் நிலைத்த கருத்து இல்லாமல் உள்ளோம் என்கின்றார்.

**'குருமொழியே மலையிலக்கு**

**மற்றைமொழி யெல்லாம்**

**கோடின்றி வட்டாடல்**

**கொள்வ தொக்குங் கண்டாய்'**

எனமொழியும் தாயுமானவர், குரு மொழிதான் நமக்கு இலட்சியம். பிறவெல்லாம் கோடுகள் வகுக்கப் பெறாமல் சதுரங்கம் ஆடுவதைப் போன்ற பயனற்றது என்கிறார்.

**'அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய**

**நூலின்றிக் கோட்டி கொளல்'**(கு. 401) என்னும் குறட்பா இங்கே நிழலாடுவதைப் பார்க்கிறோம்.

கூற்றுவன் பற்றிய தாயுமானவரின் படப்பிடிப்பு இதோ - எமன் எப்படிப் பட்டவனாம்? கல்லில் பசுமையான நார் உரிப்பானாம்- சிறு கடுகில் பெரிய கடலையே அடைத்துவிடுவானாம். இருளே கரியது. அந்த இருட்டை விடவும் கருமையானவனாம்.

**''கல்லிற் பசிய நாருரித்துக்**

**கடுகிற் பெரிய கடலடைக்கும்**

**அல்லிற் கரிய அந்தகனார்க்கு**

**ஆளாக் கினையோ அறியேனே!**

என்பது அவர் பாடல். மிகுந்த சாமர்த்தியசாலிகளை இன்றும் நாம் **''அவன் கல்லில் நார் உரிப்பான். கடுகில் கடலை நுழைப்பான்.''** என்று குறிப்பிடுகிறோம் அல்லவா?

சிற்சில இடங்களில் இவர் பேச்சு வழக்கையும் கையாண்டுள்ளார் என்பதற்கு ஒரு சான்று.

**''கண்டேன் நினதருள் அவ்வரு**

**ளாய்நின்று காண்பதெல்லாம்**

**உண்டே யதுவும் நினதாக்கி**

**னேன் உவட்டாத இன்பம்**

**மொண்டே அருந்தி இளைப்பாறினேன்''** எனும் பாடலில் 'முகந்து' என்பதை எதுகை கருதி 'மொண்டே' என்ற பேச்சு வழக்கைக் கையாண்டுள்ளார்.

இறையருளை நம் தேகம் விழும்முன் புசிப்பதற்குச் **'சேரவாரும் சகத்தீரே'** என்றழைக்கும் தாயுமானவர் அதனைத் தனியாக உண்ணாமல் **'காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர்'** அதுபோல் துய்க்க வேண்டும் என்கின்றார்.

'தலைவ நின்னலதோர் தெய்வம், நான் நினைக்கவும் மாட்டேன், எப்படித் தெரியுமா? 'கற்புறு சிந்தை மாதர் கணவரை அன்றி வேறோர் இற்புறத் தவரை நாடார் அன்றோ!' அவ்வாறு என்கின்றார் தாயுமானவர். பேரானந்தம் என்பது உற்றவர்க்கே புரியும். எப்படியென்றால், 'பெற்றவட்கே தெரியும் அந்த வருத்தம். பிள்ளை பெறாப்பேதை அறிவாளோ' என்கின்றார். வீணே உண்டு-உடுத்து 'இரண்டு கால் மாடு போலே!' வாழ்ந்தேன் என்கின்றார்.

இறைவன் தாய் போன்றவன். தன் மகன் எத்தகைய கொடிய குற்றம் செய்தாலும் தாய் பொறுத்துக் கொள்வாள். அஃது



அருளாளர் தாயுமான அடிகள்

அவள் இயல்பு. இறைவனின் இயல்பும் அஃதே என்கிறார் தாயுமானவர்.

''எத்தன்மைக் குற்றம்

இயற்றிடினும் தாய்பொறுக்கும்

அத்தன்மை நின்னருளும்

அன்றோ பராபரமே!

பாசிபடர்ந்த நீரில் கல்லெறிந்தால் பாசி விலகும். நன்னீர் தோன்றும். நாம் அறிவோம்! அதுபோல் நல்லவர் சொல்களைக் கேட்டால் நம்மன மாசுகள் விலகும். ஞானம் வந்து தழுவும் என்கிறார் தாயுமானவர்.

''கல்லெறியப் பாசிகலைந்து நன்னீர்

காணும் நல்லோர்

சொல்லுணரின் ஞானம் வந்து

தோன்றும் பராபரமே! என்கின்றார்.

உதவி என்று வருபவர் அறிமுகம் அற்றவராயினும் நாம் உதவ வேண்டும். அதுவே மாந்த நேயம்! மறுப்பவர்கள் யாருக்குச் சமமாம்! தமது கன்றையே, தமது கன்று என்று உணராது காலால் எட்டி உதைக்கும் பசுவைப் போன்றவர்கள் என்கின்றார்.

''என்றும் அடைந்தோர் கட்கு

இரங்கார் குறிப்பனைத்தும்

கன்றையுதை காலி

கதைகாண் பராபரமே! என்கிறார்.


இதே போன்று 'வாய்ச் சொல் வீரர்களை' இவ்வாறு கடிகின்றார்.

''வாயாற் கிணறு வெட்ட வாறேபோல் வாய்பேசிப்

பேயானார்க் கின்பமுண்டோ பேசாய் பாராபரமே!''

இங்ஙனம், உலகியல் வழக்காறுகளைக் கவின்கண்களால் கூர்ந்து பார்த்து உரிய இடங்களில் தமது அருட்பாடல்களில் பதிவு செய்து தமிழர்க்குத் தந்து சென்றுள்ள தாயுமானவர் உள்ளபடியே நமக்கெல்லாம் 'தாயும் ஆனவர்' என்பதில் ஐயமில்லை.

# தோல்வி என்பது தோல்வி அல்ல



செயல்களைச் செய்வதானது தன்னம்பிக்கையை அளிக்கும். ஆரம்பத்தில் நீங்கள் தோல்வி அடைந்தாலும் பரவாயில்லை. உங்கள் குறைகளைத் திருத்திக் கொண்டு அடுத்த முறை நீங்கள் வெற்றி அடையலாம். நாற்காலியில் அமர்ந்து கொண்டு கவலைப்படுவதால் எதுவும் நிகழப் போவதில்லை. அது உங்களை ஒரு நம்பிக்கை அற்றவராக ஆக்கிவிடும்.

சிலர் சில நல்ல காரியங்களைச் செய்யத் தொடங்கும் போதே மன உறுதி குலைந்து நம்பிக்கையை இழக்கின்றனர். அதனால் விக்கினங்கள் உண்டாகின்றன. எந்த நல்ல காரியம் செய்யும் பொழுதும் விக்கினங்கள் ஏற்படுவது இயற்கையே. காரியம் செய்பவருடைய மன உறுதியைச் சோதிப்பதற்காகவே அவை வருகின்றன.

அவரது நம்பிக்கை, உறுதி மற்றும் மனத் தூய்மையை சோதிக்கவே அவை வருகின்றன ஏதாவது உருப்படியாகச் செய்ய வேண்டும் என்று உங்களது உறுதி அதிகரிக்கின்ற அளவு எதிரிடை சக்திகளும் பலமடையும். அதைக் கண்டு மனம் தளர வேண்டாம். அதற்கு மசிய வேண்டாம்.


கடவுளிடமும் மற்றும் உங்களிடமும் நம்பிக்கை கொண்டு அந்த இடுக்கண்களை வெல்லுங்கள். சோதனைகளையும் இடுக்கண்களையும் எதிர் கொள்ளாமல் எந்தத் துறையிலும் உங்களால் வெற்றியை அடைய முடியாது. தகுதித்தேர்வு எழுத விருப்பம் இல்லாமல் பட்டம் பெற விழைவது நியாயமாகாது அல்லவா?

- ஸ்வாமி சிவானந்தா

நன்றி- மன அமைதிப் பூங்காவுக்கு ஒரு நல் வாழ்க்கைப்பாதை நூல்.

# தென் திருப்பதி - திருமலை வையாவூர்
# அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில்

திருவைகுண்டகிரி, தென்கருடகிரி, தென்வேங்கடகிரி, தென்சேஷகிரி, வராக க்ஷேத்திரம், இராமானுஜ யோககிரி என்று பலவாறு சிறப்பித்துக் கூறப்படுவது தென் திருப்பதி எனும் திருமலை வையாவூர் தலமாகும்.



**ஆலய அமைவிடம்**

சென்னை - கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் சென்னையிலிருந்து 70கி.மீ. தொலைவிலும், செங்கல்பட்டிலிருந்து 18 கி.மீ. தொலைவிலும், முக்தி நகர் ஏழினுள் முக்கியமாம் காஞ்சிபுரத்திலிருந்து (உத்திரமேரூர் வழியாக) 45 கி.மீ. தொலைவிலும், செங்கல்பட்டிலிருந்து வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் செல்லும் வழியிலும் இத்தலம் அமைந்துள்ளது. தாம்பரத்திலிருந்தும், செங்கல்பட்டிலிருந்தும் வேடந்தாங்கல் செல்லும் பேருந்துகள் இத்தலத்தின் வழியாகவே செல்கின்றன. இங்கு திருமலையின்மேல் செல்ல 500 படிக்கட்டுகளுடன் கூடிய அழகிய படிவழிப்பாதை உள்ளது. தனியே வாகன வழிப்பாதையும் உள்ளது.

**திருமலை வையாவூர் - பெயர்காரணம்**

புராணகாலத்தில் இராம - இராவண யுத்தத்தில் இலட்சுமணனும் வானர சேனைகளும் மயங்கிவிழ, அவர்களது மயக்கந்தீர அனுமன் வடக்கு நோக்கிச் சென்று சஞ்சீவி மலையைப் பெயர்த்துத்தூக்கி எடுத்துக் கொண்டு இலங்கை நோக்கிச் செல்லும் வழியில் தட்சண கருடகிரி எனும் இத்திருமலை வையாவூரைக் கடக்குங்கால், இம்மலைமீது விளையாடல் புரியும் வராகப் பெருமாளையும், பிரசன்னவெங்கடேசப் பெருமாளையும் கண்டு வணங்கினர். இவ்விடத்து சஞ்சீவி மலையைக் கீழே வைக்காமல் தனது வலக்கரத்திலிருந்து, இடக்கரத்திற்கு மாற்றினார். அனுமன் சஞ்சீவி மலையைத் தனது மற்றொரு கரத்திற்குக் கீழே வைக்காமல் மாற்றிய இடமாதலால் இத்தலம் திருமலை வையாவூர் எனப் பெயர் பெற்றது. இங்கு எழுந்தருளிய அனுமன் ஜெயவீர ஆஞ்சநேயர் என்று அழைக்கப்படுவாராயினர்.

**தட்சணகருடகிரி - கருடனுக்கு அருளல்**

முன்பொரு கற்பத்தில் ஹிரண்யாட்சன் எனும் அசுரன் பூமியைப் பாய்போல் சுருட்டி ஆழ்கடலினுள் கொண்டுபோய் ஒளித்துவைத்து, தேவர்களுக்குத் துன்பமிழைத்து வந்தான். அதனால் வருந்திய தேவர்களும், முனிவர்களும் பாற்கடலில் அறிதுயில் கொண்டிருக்கும் திருமாலிடம் சென்று, தங்களை அசுரனிடமிருந்து காப்பாற்றி, பூமியை மீண்டும் வெளிக் கொணருமாறு வேண்டினர். திருமால் அவர்களின் வேண்டுதலுக்கிரங்கி, வராக அவதாரம் எடுத்து, ஆழ்கடலினுள் சென்று அசுரனை அழித்தனர். பிறகு தன் கோரைப் பற்களின் மீது பூமியைத் தூக்கிவைத்துக் கொண்டு வெளிக் கொணர்ந்து முன்புபோல் அதனைநிலைப்படுத்தினர்.

அதனால் மகிழ்ந்த தேவர்கள், பிரம்மாண்ட வராக ரூபத்தைப் பலவாறு போற்றி வணங்கினர். அப்போது பெருமான் உலகிற்கு அருள்புரியத் திருவுளங்கொண்டு கருடனை அழைத்து தான் பூமியில் விளையாடி மகிழத்தக்கதோர் மலையினை வைகுண்ட லோகத்திலிருந்து கொண்டு வருமாறு பணித்தருளினர். அவர் அருளாணைப்படியே கருடன் வைகுண்ட லோகம் சென்று பஞ்சபூதங்களாலான மலையைப் பெயர்த்தெடுத்து வரும் வழியில் அதன் சிறுபகுதி பாலியாற்றின் சமீபத்தில் ஓரிடத்தில்

விழுந்தது. பின்பு தான் கொண்டுவந்த பெருமாளின் விளையாட்டுமலையைச் சுவர்ணமுகி நதியின் சமீபத்தில் வைத்தனன். கருடனால் கொண்டுவரப்பட்ட அம்மலை கருடகிரி என்றும், பாலியாற்றின் சமீபத்தில் விழுந்த சிறுபகுதி தட்சண கருடகிரி என்றும் சிறப்பு பெற்றது. பின்னர் கண்டு வணங்குபவர்கள் உய்யும் வண்ணம் வராகப் பெருமாள்கருடகிரியின் மீது எழுந்தருளினர்.

அப்போது கருடன், 'பெருமானே, பூமியைத் தாங்கும் தேவரீரது விஸ்வரூபத்தினை அடியேன் கண்டுகளித்திட வேண்டும்' என வேண்டினன். அவ்வாறே வராகப் பெருமாள் பூமியைத் தேவியாய் ஏந்தியவண்ணம் விஸ்வரூப கோலத்துடன் தட்சண கருடகிரியில் கருடனுக்குத் திருக்காட்சியருளினர்.

### தட்சண சேஷகிரி - ஆதிசேஷனுக்கு அருளல்

பின்பொரு சமயம் திருமால் ஆதிசேஷனை அழைத்து. 'நாம் கலியுகம் முடியும்வரை பூமியில் விளையாடி வாசஞ்செய்யப் போகிறோம். அதனால் நீ உயர்ந்ததொரு மலையுருவங் கொண்டு கருடகிரியின்மேல் விளங்குவாயாக' என்றனர். அவ்வாறே ஆதிசேஷன் கருடகிரியடைந்து உயர்ந்த மலையுருவங் கொண்டனன். அதனால் அம்மலை சேஷகிரி என்று வழங்கலாயிற்று. அதன்மீது திருமால் புரட்டாசி மாதம் சிரவணத்துடன் கூடிய துவாதசியில் திங்கட்கிழமையில் ஸ்ரீநிவாசனாக எழுந்தருளினர்.




அப்போது ஆதிசேஷன், 'பெருமானே, அடியேன் செய்த பெரும் புண்ணியத்தால் இங்கு தங்களைத் தாங்கும் பெரும்பேற்றைப் பெற்றுள்ளேன். தேவரீருக்குத் திருக்குடையாய் இருக்கும் பேற்றையும் அருளவேண்டும்' என வேண்டினன். பெருமாள், 'நீவேண்டியவாறு உனக்குத் தட்சண கருடகிரியில் அருளுவோம்' என்றனர். அவ்வாறே ஆதிசேஷனுக்குத் தட்சண கருடகிரியில் ஸ்ரீநிவாசப் பெருமாள் திருக்காட்சியருளி, ஆதிசேஷனைத் திருக்குடையாய் ஏற்றபடி, மங்கல குணசொரூபியாய் இவ்விடத்து எழுந்தருளினர். ஆதிசேஷனுக்குக் காட்சியளித்ததால் இத்தலம் தென் சேஷகிரி என்றும் வழங்கலாயிற்று.

### தொண்டைமானுக்கு அருளல்

கருடகிரி, சேஷகிரி எனச் சிறப்புப் பெற்ற திருப்பதி திருமலையின்மீது எழுந்தருளியுள்ள வெங்கடேசப் பெருமாளிடம் அளப்பரிய பக்தி கொண்ட தொண்டைமான் சக்கரவர்த்திக்காக, பெருமாள் தனது சங்கு சக்கரங்களை அனுப்பி, அவன் ஆண்டுவந்த நாட்டினைப் பகைநாட்டு அரசனிடமிருந்து காத்தருளினார். பின்னர் தொண்டைமான் திருப்பதி திருமலைமீது ஸ்ரீபெருமாளுக்கு ஓர் அழகிய திருக்கோயிலைக் கட்டுவித்தான். பெருமாள் அருளாணைப்படி இத்திருமலை வையாவூரிலும் ஓர் அழகிய திருக்கோயிலைக் கட்டுவித்தான். இங்கு பெருமாள் தொண்டைமானுக்கு ஒரு தேரின்மீது செங்கோலுடன் பிரசன்னமாகி அருள் செய்தனர். இதனால் பெருமாள் பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் என அழைக்கப்படுவாராயினர். ஸ்ரீபெருமாள் தேரின்மீது காட்சியளித்ததற்கு அடையாளமாகத் தேர்ச்சக்கர அடையாளமும், குதிரைக்கால் குளம்பின் அடையாளமும் காலங்கள் பலவற்றைக் கடந்து இன்றளவும் ஒரு பாறைமீது அமைந்துள்ளது.

### திருவோண தீப தரிசனம்

ஒரு சமயம் படைப்புக்கடவுள் பிரமன், திருப்பதி-திருமலையில் பெருமாளின் சன்னதியை அடைந்து, அங்கு இரண்டு பேரொளி விளக்குகளை ஏற்றிவைத்து, அவ்விளக்குகள் கலியுகம் முடியும் வரை அணையாமலிருக்கக் கருணை செய்ய வேண்டும் என வேண்டி நின்றனன். அப்போது மகிழ்ச்சியினால் மலர்ந்த திருக்கண்களை உடைய ஸ்ரீநிவாசப் பெருமாள், 'பிரம்மனே! இக்கருடகிரிமீது



விளையாடல் புரிய முன்பு நாம் ஐப்பசி மாத திருவோண நன்னாளில் வராகரூபத்தில் எழுந்தருளினோம். அந்த ரூபத்திலேயே தட்சண கருடகிரியில் கருடனுக்குக் காட்சி அருளினோம். இனி அவ்விடத்து, வேண்டும் உயிர்களின் பாவங்களைக் களைய, கலியுகம் முடியும் வரை திருவோண நாளில் ஜோதி ரூபமாய்க் காட்சியளிப்போம். தட்சண கருடகிரியில் எமது ஜோதி ரூபத் திருக்காட்சி உள்ளவரை, இங்கு நீஏற்றிய பேரொளி விளக்குகளும் அணையாதிருக்கும்' என்றருளினார். உடன் பிரமன் ஸ்ரீநிவாசப் பெருமாளைப் பலவாறு போற்றி வணங்கி அவருக்குப் பிரம்மோற்சவங்கள் செய்தனன்.

பின்னர் ஸ்ரீபெருமாளின் ஜோதி தரிசனத்தைக் கண்டருள பிரமன் தட்சண கருடகிரியை அடைந்தனன். இவ்விடத்து பெருமாளின் திருச்சன்னதியை அடைந்து வணங்கி நிற்கையில் ஸ்ரீநிவாசர் பிரமனுக்குத் திருவோண நன்னாளில் ஜோதிரூபமாய்த் திருக்காட்சி அருளினர். வேண்டும் உயிர்களின் பாவங்களைக் களைய, தொடர்ந்து திருவோண நாட்களில் தீபதரிசனமளித்து வருகின்றனர். இத்தீபதரிசனம் கண்டோர் இம்மை, மறுமைப் பாவங்கள் அனைத்தும் விலகும். வாழ்வில் பிரகாசம் உண்டாகும்.

**கிருஷ்ணனாக அருளல்**

இலங்காபுரி வேந்தன் இராவணனை அழித்து, சீதாதேவியைச் சிறைமீட்டு ஸ்ரீராமன் இலட்சுமணனோடு அயோத்தி திரும்பும் வழியில் சேதுவில் ஸ்நானஞ்செய்து, பின்னர் இத்திருமலைவையாவூரை அடைந்து வராகத்தீர்த்தத்திலும் நீராடி தோஷம் நீங்கப் பெற்று தலைநகர் திரும்பினன்.

பூர்வகாலத்தில் பிரசன்னவெங்கடேசப் பெருமாளிடம் மிகுந்த பக்திகொண்ட முன்னயர்கோன், பிராட்டியர்கோன் எனும் இருவர் இப்பகுதியில் பசுக்களை மேய்த்து வருவது வழக்கம். அவர்களுக்குப் பெருமாள் இம்மலைமீது கிருஷ்ணராகத் திருக்காட்சியருளினர்.

**திருவைகுண்டகிரி - இராமானுஜ யோககிரி**

சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு .முன்பு வைணவ ஆச்சார்யர்களுள் சிறந்த இராமானுஜர் இத்திருமலைக்கு எழுந்தருளி, இங்கு சேவை சாதித்துக் கொண்டிருக்கும் பரமபதநாதனின் பல்வேறு அவதாரங்களைக் கண்டு வணங்கி, இக்கிரிக்குத் திருவைகுண்டகிரி எனத் திருப்பெயரிட்டு வைகுண்டப் பெருமாளை மனத்தில் இருத்தி, சிலகாலம் யோகத்திலிருந்தனர். பின்னரே இங்கிருந்து சென்று பஞ்சஸம்ஸ்காரம் செய்து கொண்டனர். அதனால் இத்தலம் திருவைகுண்டகிரி என்றும் இராமானுஜர் தங்கி யோகஞ் செய்ததால் இராமானுஜ யோககிரி என்றும் வழங்கலாயிற்று.

**அலர்மேல் மங்கைத் தாயார்**

இத்திருக்கோயிலில் அலர்மேல் மங்கைத் தாயார் தனிச் சன்னதி கொண்டு எழுந்தருளியுள்ளார். இவருக்குப் பிரதி வாரம் வெள்ளிக்கிழமையில் திருமஞ்சனம் செய்து வணங்கினால் திருமணத்தடை நீங்கும்.

**இராஜா தோடர்மால் திருப்பணி**

சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த விஜயநகர அரசைச் சேர்ந்த இராஜா தோடர்மால் இங்கு எழுந்தருளியுள்ள பிரசன்ன வெங்கடேசப் பெருமாளிடம் மிகுந்த பக்திகொண்டு, இத்திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்து பூஜை, திருவிழாக்களைப் பல ஆண்டுகள் சிறப்புற நடத்தினார். இராமானுஜருக்கென ஒரு சன்னதியை இத்திருக்கோயிலில் அமைத்து, தனது உருவத்தையும் சிலையாக வடித்துள்ளார்.

**நேத்திர தரிசனம்**

திருப்பதி திருமலையைப் போலவே இங்கும் பிரசன்ன வெங்கடேசப் பெருமான் பிரதிவாரம் வியாழக்கிழமை தோறும் பக்தர்களுக்கு நேத்திர தரிசனமளிக்கிறார். அன்று மாலையில் தனது திருமேனி முழுவதும் மலர் அலங்காரத்தில் சேவை சாதிக்கிறார். இம்மலர் அலங்கார சேவையில் ஸ்ரீபெருமாளைத் தரிசனம் செய்வது மிகவும் சிறப்பு. இந்நேத்திர தரிசனம் கண்டோர் எண்ணிய எண்ணங்களும், வேண்டிய வேண்டுதல்களும் எளிதில் ஈடேறும் என்பது திண்ணம்.

**பிரார்த்தனைத் தலம்**

இது சிறந்த பிரார்த்தனைத் தலமாக விளங்குகிறது. இங்குள்ள வராகதீர்த்தத்தில் சனி வாரத்தில் நீராடினால் பிரம்மகத்தி தோஷம் நீங்கும். இத்தீர்த்தத்தில் நீராடி, பெருமாளை அங்கப்பிரதட்சனம் வந்தால் திருமணத்தடை நீங்கும். புத்திரப்பேறு, தேகபலம், நிறைந்த ஐஸ்வரியங்கள் கிடைக்கும். எண்ணிய எண்ணம் ஈடேறும். இதில் நீராடி ஜெயவீரர் ஆஞ்சநேயரை அங்கப்பிரதட்சனம் வந்தால் தீராத வழக்குகளில் வெற்றி கிடைக்கும். சஞ்சலங்கள் விலகும், இத்தலத்தில் எடைக்காணிக்கை செலுத்துவோரது வாழ்வில் செல்வவளம் பெருகும். முடிக்காணிக்கை செலுத்துவோரது பிணிகள் அகலும்.

**பூஜை முறை**


இத்திருக்கோயிலில் வைகானசஆகமப்படி பூஜைகள் நடைபெற்று வருகிறது. தினமும் ஐந்துகால பூஜைகள் நடைபெறுகின்றன. இத்திருமலையின் ஆதீமூர்த்தி வராகப் பெருமாள் ஆவார். எனவே இங்கு முதலில் திருநடைத் திறக்கப்படுவதும், முதலில் நைவேத்திய ஆராதனைகள் நடைபெறுவதும் வராகப் பெருமாளுக்கே ஆகும்.

**திருவிழாக்கள்**

இங்கு ஆண்டுதோறும் சித்திரையில் கள்ளபிரான் பிரம்மோற்சவமும், புரட்டாசியில் ஸ்ரீநிவாசன் பிரம்மோற்சவமும் மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. ஆங்கில வருடப்பிறப்பன்று திருப்படி உற்சவம், இரத சப்தமி, தமிழ் வருடப்பிறப்பன்று இலட்சதீபம், புரட்டாசி சனிக்கிழமைகளில் சிறப்பு தரிசனம், வைகுண்ட ஏகாதசி, குலசேகர ஆழ்வார் சாற்றுமுறை மற்றும் மாதந்தோறும் திருவோண தீப தரிசனம், பௌர்ணமி, அமாவாசைதரிசனம் ஆகிய உற்சவங்கள் பக்தர்கள் மகிழும் வண்ணம் வைகுண்டகிரிவாசன் அருளால் இனிது நடைபெறுகிறது. ஆண்டுதோறும் புரட்டாசி சனிக்கிழமையில் சென்னையிலிருந்து பாதயாத்திரையாகப் பெருமாளவில் பக்தர்கள் இவ்வைகுண்டகிரிக்கு வருகை தந்து திருக்குடைகளைக் காணிக்கையாக அளிக்கின்றனர்.


திருப்பதி - திருமலை சென்று பெருமாளைத் தரிசனம் செய்தவர்கள் இத்திருமலை வையாவூருக்கு வருகைதந்து வராகத்தீர்த்தத்தில் நீராடி பிரசன்னவெங்கடேசப் பெருமாளையும் தரிசனம் செய்தபிறகே தங்கள் தலயாத்திரைப் புண்ணியத்தைப் பெறுவர்.

இத்தகைய சிறப்புகள் கொண்ட திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் பிரசன்ன வெங்கடேசப் பெருமானை தரிசித்து வாழ்வில் வளம் பெறுவோமாக.



# தமிழ் ஞானசம்பந்தர்

பேராசிரியர் முனைவர் ச.கணபதி ராமன்



தமிழகம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து ஏழாம் நூற்றாண்டு வரை களப்பிரர்களின் கொடுங்கோன்மைக்கு உட்பட்ட காலத்தில் காரைக்கால் அம்மையார் போன்ற கதிர் ஒளிகள் ஆங்காங்கே தோன்றி தமிழைக் காத்து நின்றன.

காரைக்கால் அம்மையார் காலத்துக்குப் பின்னர் (ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு பின்னர்) அதாவது கி.பி.ஆறாம், ஏழாம் நூற்றாண்டுகளில் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் போன்ற அருளாளர்கள் தோன்றி தமிழை வளர்த்து செம்மையுற ஆக்கிட முற்பட்டனர்.

**கதிரொளி**

அயல் மொழியான பாலி மொழியினையும் பண்பாட்டினையும் நாட்டில் புகுத்தி களப்பிரர்கள் அவர்களின் கலாச்சாரத்தை வளர்க்க முற்பட்ட போது திருஞானசம்பந்தர் தோன்றினார்.

திருஞான சம்பந்தர் தோன்றியமைக்குரிய காரணங்களைச் சேக்கிழார் பெரிய புராணத்தில் குறிப்பிடுகிறார். திசைகள் அனைத்திலும் உள்ள பெருமைகளைத் தென் திசையில் உள்ள தமிழகம் பெற்றிடவும் அயல்நாட்டாரின் மொழியினையும் பண்பாட்டினையும் வென்று ஒதுக்குவதற்குமே திருஞான சம்பந்தர் அவதாரம் செய்தார் என்று சேக்கிழார் குறிப்பிடுகிறார். இதனைப் பெரிய புராணத்தில் வரும் கீழ்கண்ட பாட்டால் அறியலாம்.

''திசைஅனைத்தின் பெருமை எலாம்
தென்திசையே வென்று ஏற,
மிசைஉலகும் பிறஉலகும் மேதினியே
தனிவெல்ல,
அசைவு இல்செழும் தமிழ்வழக்கே அயல்
வழக்கின் துறைவெல்ல
இசைமுழுதும் மெய் அறிவும் இடம்
கொள்ளும் நிலைபெருக''

அயல் வழக்கான களப்பிரர்களின் வழக்குகள் தமிழக மக்களை கொடும் துன்பத்துக்குள்ளாக்கின. அந்த வழக்கினை எதிர்த்து வெற்றி பெறவே திருஞானசம்பந்தர் திருஅவதாரம் செய்தார் என்பது வரலாறு ஒப்பிய உண்மை.

**திருஞானசம்பந்தர் பிறப்பு**

திருஞான சம்பந்தர் சீர்காழி பதியில் அந்தணர் குலத்தில் பிறந்தவர். சிவபாத இருதயர், பகவதியார் இவர்களது பெற்றோர். தெய்வத் திருவருளால் தோன்றிய திருஞான சம்பந்தர், அம்மையின் ஞானப்பாலை உண்டு பதிகங்கள் பாடத் தொடங்கினார். இவர் பாடிய முதல் பதிகம் ''தோடுடைய செவியன்'' என்று தொடங்கும் பதிகமாகும். பதிகங்கள் தோறும் பதினொன்று பாடல்கள் இவரது பதிகங்களில் இருக்கும். பதினொறாவது பாடலில் இவர் தன்னை தமிழோடு இணைத்து பாடும் பண்புடையவர்.



ஞானசம்பந்தர்

முதல் திருப்பதிகத்திலேயே ''ஞான சம்பந்தன் உரைத்த திருநெறிய தமிழ்'' என்று தமிழைத் தெய்வ தமிழாக்கியுள்ளார். இவர் பாடிய 227 பதிகங்களில் கடைகாப்பு பாடலான கடைசிப் பாடலில் தன்னைத் தமிழோடு இணைத்துக் குறிப்பிடுகிறார். ''தமிழ் ஞான சம்பந்தன்''. ''செந்தமிழ் பரப்பு உறுஞான சம்பந்தன்'', ''தமிழ் விரகன்'', ''முத்தமிழ் நான்மறை ஞான சம்பந்தன்'', ''தமிழ்நாடு

ஞான சம்பந்தன்'', ''தமிழ் விரகன் ஞானசம்பந்தன்'', ''தமிழ் மாலைகள் தந்த ஞான சம்பந்தன்'', ''இசைஞான சம்பந்தன்'', ''நற்றமிழ் ஞான சம்பந்தன்'', என்று பலவாறாகத் தமிழோடு தன்னை இணைத்துப் பாடுகின்றார் ஞானசம்பந்தர்.

**தமிழுணர்வு**

தமிழ் உணர்வும், இசைஉணர்வும், ஞானசம்பந்தர் பால் பெருக்கெடுத்து ஓடின. ஞான சம்பந்தர் வாழ்ந்த காலத்தில் தமிழுக்கும், தமிழ் இசைக்கும் கேடுகள் பல நடந்தன. அந்த கேடுகளைக் களைவதற்கும் தமிழையும், தமிழ் இசையை வளர்ப்பதற்கும் ஞானசம்பந்தர் போராட்டத்தையே தொடங்கினார் என்றும் கூறலாம். இளம் வயதிலேயே மொழிப் பற்றினை முனைப்போடு கொண்டிருந்த ஞானசம்பந்தர் சமுதாய போராட்டங்களுக்குக் காரணமாக இருந்த சாதி பிரிவினையும் வெறுத்து ஒதுக்கி அனைவரும் சமமே என்ற கொள்கையை நிலை நாட்டினர்.

வைதீக அந்தணர் குலத்தில் பிறந்த ஞான சம்பந்தர் புரட்சிகரமான சிந்தனையுடையவர். திருநீலகண்டத்து யாழ்ப்பாணர் என்னும் இசைஅறிஞர் யாழ் மீட்டுவதில் மிகச்சிறந்த நிபுணர். இவர் திருஞான சம்பந்தரின் பெருமையினைக் கேள்வியுற்று தம் மனைவி மதங்கசூளாமணி அம்மையாருடன் ஞானசம்பந்தரை காண்பதற்கு சீர்காழி வந்தார். சீர்காழியில் தோணியப்பர் திருக்கோயிலில் ஞானசம்பந்தரைக் கண்டு அவர்திருவடியில் வீழ்ந்து வணங்கி எல்லையற்ற இன்பம் கொண்டார். சம்பந்தர் யாழ்ப்பாணரையும் அவரது மனைவியரையும் வாழ்த்தி கோயிலுக்குள் அழைத்துச் சென்று யாழ்மீட்டி இறைவனை வணங்கச் செய்தார். யாழ்ப்பாணரும் எல்லையற்றப் பேறு பெற்றோம் என்று எண்ணி யாழிசையால் இறைவனைப் போற்றினார். சம்பந்தரும் மற்றைய அந்தணப் பெருமக்களும் அடியார்களும் யாழ்ப்பாணரின் இசைதிறமையைக் கேட்டு மகிழ்ந்தனர். அவர்களை வாழ்த்தினர். சம்பந்தர் அவர்களை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று நல்விருந்து நல்கினர். அவர்களை தம் வீட்டில் தங்கச் செய்தார்.

ஞான சம்பந்தரின் இந்தச் செயல் புரட்சிகரமானச் செயலாகும். தாழ்ந்த குடியில் பிறந்த பாணரைக் கோயிலுக்கு அழைத்துச் சென்றதோடு மட்டுமின்றி வீட்டிற்கு அழைத்து வந்து விருந்து செய்து ஓம்பியது பெருமைப்படத்தக்க செயலாகும்.

ராமானுஜருக்கு முன்பே சம்பந்தர் பெருமைப் படத்தக்க இந்தச் செயலை செய்து பெரும் புகழ் பெற்றார்.

**புதிய சிந்தனை**

ஞான சம்பந்தர் தமிழ் மொழியினையும் தமிழ் பண்பையும் தெய்வீகத் திருச் செயல்களையும் மட்டிலும் வளர்க்கவில்லை. தம்முடைய பாடல்களில் அகப்பொருள் திணைகளை இழைத்து தமிழ் மக்களின் அக வாழ்க்கையினையும் சுட்டிக் காட்டுகிறார். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்து திணைகளும் இயற்கைக் காட்சிகளும் இவரது பாடல்களில் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கின்றன.

இறைவனையும் திருக்கோயில்களையும் மட்டுமே திருநாவுக்கரசரும், சுந்தரரும் பாடி பரவி வந்தார்கள். இவற்றோடு திருஞான சம்பந்தர் திருக்கோயில் தல மரத்தையும் பாடியுள்ளார். திருக்குற்றாலத்திற்கு வந்து திருக்குற்றாலத்தின் தல மரமான குறும்பலாவை இவர் பாடிச் சிறப்பித்துள்ளார். இயற்கைக் காட்சிகள் நிறைந்த திருக்குற்றாலத்தின் இயற்கை எழில்களையும் இனிய காட்சிகளையும் அப்பதிகத்தில் இவர் சிறப்பாக இழைத்து வைத்துள்ளார். அப்பதிகத்தில் ஒரு பாடல்.

**''திருந்த மதிசூடித் தெண்ணீர் சடைக்கரந்து**
**தேவிபாகம் பொருந்திப் பொருந்தாத**
**வேடத்தாற் காடுறைதல் புரிந்த செல்வர்**
**இருந்த இடம் வினவில் ஏலங்கமழ் சோலையின**
**வண்டுயாழ் செய் குருந்த மணம் நாறுங்**
**குன்றிடஞ்சூழ் தண்சாரற் குறும்பலாவே''**

என்பதாம்.

இயற்கையிலும், இறைவனை வழி படுவதிலும் புதிய சிந்தனைகளைக் கமழவிட்ட திருஞானசம்பந்தர் தெய்வங்களின் பெயர்களையும் தமிழ்ப்படுத்திப் பாடியுள்ளார். நெல்லையில் நெல்லையப்பரும், காந்திமதி அன்னையும் எழுந்தருளியிருக்கிறார்கள். நெல்லையப்பரை பாடி பரவிய சம்பந்தர்

காந்திமதி அன்னையையும் பாடுகின்றார். ஆனால் அவர் காந்திமதி அன்னை என்று குறிப்பிடவில்லை. காந்திமதி என்ற வடமொழிப் பெயரை தமிழாக்கி ''கதிர்நிலா அன்னை'' என்று குறிப்பிட்டு பாடுகிறார். அப்பாடல்.

''காண்டகு மலைமகள் கதிர்நிலா
முறுவல்செய் தருளவேயும்
பூண்ட நாகம்புறங் காடரங்
காநட மாடல் பேணி
ஈண்டுமா மாடங்கள் மாளிகை
மீதெழு கொடிமதியும்
தீண்டிவந் துலவிய திருநெல்வே
லியுறை செல்வர் தாமே'' என்பதாம்.

அருட்செயல்கள்

ஞானசம்பந்தர் பெருமான் பற்பல அருட் செயல்கள் நிகழ்த்தி அடியார்களின் துன்பத்தைப் போக்கியுள்ளார். திங்களூரில் கணவனாக வர விருந்தவன் கருநாகம் தீண்டி இறந்ததும் கதறி அழுத பெண்ணின் கண்ணீரைத் துடைத்து, இறந்தவனை எழுப்பி அப்பெண்ணிற்குத் திருமணம் செய்து வைத்தார். முயலகன் நோயால் துன்புற்ற பெண்களின் நோய் தீர்த்தார். திருவீழிமிழலையில் பஞ்சத்தால் வாடிய மக்களின் துயர்களை இறைவன் துணைக் கொண்டு நீக்கினார். திருமறைக் காட்டில் கோயில் திருக்கதவை அடைக்கவும் திறக்கவும் திருநாவுக்கரசரோடு இணைந்து பதிகம்பாடி அடியார்கள் வணங்கிட வழிவகை வகுத்துக் கொடுத்தார். பூம்பாவை என்ற பெண்ணை உயிர்ப்பித்தார். தமிழ்மொழியை அழிக்க நினைத்த வேற்று சமயத்தாரோடு வாதம் செய்து வெற்றி பெற்றார்.

இவ்வாறு தமிழால்பாடிய திருஞான சம்பந்தப் பெருமான் ஆற்றிய அருட் செயல்கள் பலப்பல.

திருமணம்

திருஞான சம்பந்தருக்கு பதினாறாவது வயதில் திருமணம் செய்யப் பெற்றோர்கள் முன் வந்தனர். ஆனால் இவர் மனம் திருமணத்தில் நாட்டம் கொள்ளவில்லை. பெற்றோர்களின் வற்புறுத்தலால் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டார். திருமணம், திருமணப் பெருநல்லூரில் (ஆச்சாள்புரம், இவ்வூர் சீர்காழிக்கு அருகில் உள்ளது). நடந்தது. திருமணம் நிறைவாகி வேள்வியை சுற்றி வரும் பொது ''காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி, இறைவா எங்களை ஏற்றுக் கொள்'' என்று சம்பந்தர் நினைத்திட சம்பந்தரும் அவரது மனைவியும் திருமணத்தைக் காண வந்த அடியார்களும் அருளாளர்களும் ஒப்பற்ற பெரும் ஜோதியில் கலந்தனர்.

முடிவுரை

செந்தமிழ் வழக்கு அயல் வழக்கை வென்றிட அவதாரம் செய்த திருஞான சம்பந்தர் ''தமிழ், தமிழ்'' என்றே, எங்கும், யாண்டும், சொல்லியும், பாடியும், வந்திருப்பதைக் கொண்டு அவரைத் தமிழ் ஞானசம்பந்தர் என்று சொல்லலாமன்றோ!

# ஞானிகளின் பற்றற்ற உள்ளம்



இறைவன் வாழப் பிறப்பித்திட்ட ஆணை காரணமாகவே வந்து தோன்றி வாழ்கின்ற ஞானிகள் தாமரை இலைநீர் போல பட்டும் படாமலே இவ்வையத்தில் வாழ்வார்கள். உலக சுகங்கள் அவர்களுக்குச் சுகங்களும் அல்ல; துன்பங்களும் அவ்வாறே. பற்றற்ற ஞானிகளின் பரிபக்குவநிலையைக் காட்டுவதாக உள்ள பாடல் பின்வருமாறு:

**இறக்கவும் ஆசைஇல்லை இப் படிநான்**
**இருக்கவும் ஆசைஇன்று இனிநான்**
**பிறக்கவும் ஆசைஇலை உலகெல்லாம்**
**பெரியவர் பெரியவர் எனவே**
**சிறக்கவும் ஆசைஇலை விசித்திரங்கள்**
**செய்யும் ஆசைஒன்றில்லை**
**துறக்கவும் ஆசைஇலை துயர் அடைந்து**
**தூங்கவும் ஆசைஒன்றிலையே.**

- இராமலிங்க சுவாமிகள்.

# மாரி - இன்ப மாரி

முனைவர் டி.எஸ்.ராமஸ்வாமி



எம்பெருமான் வேதங்களை வெளியிட்டான். பற்பல அவதாரங்களில் தனது கல்யாண குணங்களை உணர்த்தினான். நின்றான், இருந்தான், கிடந்தான், நடந்தான் என்று பலவாறாக திவ்ய தேசங்களில் அர்ச்சைவடிவில், நமக்காகக் காத்திருக்கிறான். நாம்தான் திருந்தவே இல்லை!

''நம்மைத் திருத்தி ஆட்கொள்வது அவன் கடமை, நாம் எந்தவிதமான முயற்சியும் செய்ய வேண்டியது இல்லையே'' என்பது சரியல்ல.

மரம், கரி, கல் போன்று அசையாமல் கிடப்பதற்கு நாம் அசேதனப் பொருள்களல்ல, சேதனர்கள். அறிவுள்ள ஜீவன்கள். அவன் நமக்கு அறிவைக் கொடுத்துள்ளதால் நமக்கும் அந்த அறிவைக் கொண்டு ஆற்ற வேண்டிய கடமைகள் உள்ளன. தன்னை வணங்க அளித்த ஐம்புலன்கள் கொண்டு எம்பெருமானைப் பெற வேணுமென்ற ருசி நமக்கு இருக்க வேண்டும். அந்த ருசி இருந்தாலே போதும், அவனை அடைய அவனே உபாயமாக நின்று அருள்வதால் நாம் செய்ய வேண்டிய முயற்சி ஏதுமில்லை. சாத்திரங்கள் அனைத்தின் சாரமான பொருளை, பூதத்தாழ்வார் மிக அற்புதமாக இரண்டாம் திருவந்தாதியில் அருளுகிறார்.

**தனக்கடிமை பட்டது தானறியானேலும்**
**மனத்தடைய வைப்பதாம் மாலை - வனத்திடரை**
**ஏரியாம் வண்ணம் இயற்றும் இதுவல்லால்**
**மாரியார் பெய்கிற்பார் மற்று**

காடும், புதருமாக இருக்கும் மேட்டு நிலத்தை, மழைநீர் வீணாகப் போய் விடாமல் தடுக்க, ஏரியாகப் பள்ளம் வெட்டுதல் நம்மால் முடியும்.

ஆனால் அதை நிரப்ப மழை பெய்யும்படி செய்ய வல்லார் யார்? எம்பெருமான் ஸங்கல்பத்தால்தானே அது சாத்தியமாகும்?

அதே போல், ''நாம் அடிமைகள், அவனே எஜமானன்'' என்ற உணர்வுடன், நம் மனத்தைச் செம்மைப்படுத்தி பாங்கான நிலையில் வைத்துக் கொள்வது ஒன்றே நாம் செய்ய வேண்டுவது ஆனால், அப்படி நாம் செய்வதே, அவனை அடைய உபாயம் ஆகிவிடாது. அப்படி நம்மைச் சீர்திருத்திக் கொண்டால், ஒரு வேளை பகவான் நம்மைத் திருவுள்ளம் பற்ற வருவானாகில், அவன் நம்மிடத்தில் நன்கு தங்குவதற்கு, அந்தச் சீர்திருத்தமே பாங்காக அமையும்.

இந்த இடத்திலே பூதத்தாழ்வார், பகவானின் அருள், ருசி உடைய சேதனருக்குக் கிடைப்பதை, ''மாரி பெய்கை'' என்கிறார்.

நம்மாழ்வார் திருவாய்மொழியில் (4-5-10)

**''உண்டும் உமிழ்ந்தும் கடந்தும்**
**இருந்தும் கிடந்தும் நின்றும்**
**கொண்ட கோலத்தொடு வீற்றிருந்தும்**
**மணம்கூடியும்**
**கண்ட ஆற்றால் தனதே உலகு என**
**நின்றான்தன்னை**
**வண்தமிழ் நூற்க நோற்றேன்**
**அடியார்க்கு இன்பமாரியே''**

என்று அருளுகிறார்.

**''எம்பெருமான் விஷயமாக திருவாய் மொழி பாடுவதற்கு பாக்கியம் பெற்றேன். இத்திருவாய் மொழியானது தொண்டர்க்கு ஆனந்தத்தைப் பொழியும் மேகமாக உள்ளது''** என்று தன் திருவாய்மொழியை **''இன்ப மாரி''** என்கிறார் ஆழ்வார்.


அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரின் ஆசார்ய ஹ்ருதயத்திலே, ''இன்பமாரி ஆராய்ச்சி'' என்ற இடத்திலே, ''இன்பமாரி'' என்பதற்கு ''திருவாய்மொழியின் மூலம் பேரானந்தத்தைப் பொழியும் மேகமான ஆழ்வார்'' என்பது வியாக்யானம்.

ஆகவே, மேற்சொன்ன ஆழ்வார் பாசுரத்திலும், **''அடியார்க்கு இன்பமாரியாகிய நான் வண்தமிழ் நூற்க நோற்றேன்''** என்றும் பொருள்கொள்ளலாம்.

ஆகவே, நம்மாழ்வாரின் **''ஹ்ருதயத்தை''** அறிந்து கொண்டு **''திருவாய்மொழி''** என்கிற **''இன்பமாரியை''**ப் பொருள் தெரிந்து அனுஸந்தித்தால் **''வனத்திடர்''** போன்று கிடக்கும் நம் நெஞ்சங்கள் திருந்தி, **''திருமால் அருள் தங்கும் ஏரியாக''** வைத்துக் கொள்ள முடியும். அப்போது, பகவத் க்ருபை **''மாரி''**யாகப் பெய்யும் போது, நம் நெஞ்சிலே தங்கி நிலைக்க, ஏற்றதாக அமையும் என்பது தெளிவாகிறது.

இன்ப மாரியை (ஆழ்வாரை அல்லது திருவாய் மொழியை) உறுதியாக நாம் பற்றினால், அருள் மாரியை அவன் பொழியும் போது நம் நெஞ்சிலே அவன் நிலைத்து நாம் உய்ய வழியுண்டு!

## இறைஞானம்



நீ காலில் செருப்பு போட்டிருந்தால் முள்ளின் மேலும் எளிதாக நடக்கலாம். ஞானமாகிய செருப்பைப் போட்டுக் கொண்டால் உலகமென்னும் முள் நிறைந்த வனமெங்கும் பயமின்றித் திரியலாம்.

- இராமகிருட்டிணப் பரமஹம்சர்

# அதிசய தேவாரத்தலம்

## படமும் படைப்பும் பனையபுரம் அதியமான்

ஆண்டுதோறும் சிவனையும், சக்தியையும் சூரியன் வழிபடும் தலம்- சோழர், பாண்டியர், விஜயநகர மன்னர்களால் திருப்பணி செய்யப்பட்ட திருக்கோயில் - திருஞான சம்பந்தரால் பாடப்பெற்ற தேவாரத்தலம் - சோழனின் காதலி பரவை நங்கை பெயரால் அழைக்கப்பட்ட ஊர் - சிபி மன்னன் பேறு பெற்ற தலம் - கண் கோளாறு போக்கும் இறைவன் - சோழவள நாட்டின் குறு நாட்டு தலைநகரம் - திருநீலகண்டர் தன் துணைவியோடு காட்சி தரும் கோலம் என பல்வேறு பெருமைகள் கொண்ட தலமாக விளங்குவது விழுப்புரம் அருகே அமைந்துள்ள பனையபுரம் திருத்தலம்.

அதிசய தேவாரத்தலத்தின் சிறப்பு என்ன என்பதை அறியும் முன்பாக நீண்ட நெடிய வரலாற்றுப் பின்னணி கொண்ட இத்தலப் பெருமைகளைப் பார்ப்போம்.

**தொன்மைச்சிறப்பு**

சோழர் காலத்தில் இராஜேந்திர சோழ வளநாட்டின் துணைக் கோட்டங்களில் ஒன்றான, பனையூர் நாட்டில், உட்பகுதி நாடான புனையூர் நாட்டின் தலைநகராக விளங்கிய நகர் பரவைபுரம் எனப்படும் பனையபுரம், இங்குள்ள சிவாலயம் நடுநாட்டின் இருபதாவது தலமாகும்.

இந்தியத் தொல்லியல் துறை கி.பி.1917 ஆம் ஆண்டு ஆய்வின் மூலம் பன்னிரண்டு கல்வெட்டுக்கள் கண்டறியப்பட்டுள்ளன. இதன் மூலம் இவ்வாலய திருப்பணிகள் முதலாம் இராஜேந்திரன் (கி.பி.1012), இரண்டாம் இராஜேந்திரன் (கி.பி.1058), ஆதி ராஜேந்திர தேவன் (கி.பி.1070), முதலாம் குலோத்துங்கன்(கி.பி.1118), ஜடவர்மன் முதலாம் சுந்தர பாண்டியன் (கி.பி.1265), மூன்றாம் விக்கிரம பாண்டியன் (கி.பி.1288) என பல்வேறு மன்னர்களின் திருப்பணியையும், இவ்வாலயம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதையும் எளிதில் அறிய முடிகின்றது.

இன்றைய பனையபுரம் நாடு, பொறையூர் நாட்டு பரவைபுரம் என்றும், இராஜேந்திர சோழ வள நாட்டின் பனையூர் நாட்டு, பொறையூர் நாட்டு பரவைபுரம் என்றும் அன்றைய கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**இறைவன் பனங்காட்டீசன்**

முதலாம் குலோத்துங்க சோழனின்



திருநீலகண்டர் தன் துணைவியோடு

எட்டாம் ஆட்சியாண்டு கல்வெட்டில் இறைவன் பெயர் திருப்பனங்காடுடைய மகாதேவர் என்றும், கோயிலை திருப்புறவார் பனங்காடுடையவன் கோயில் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் சில கல்வெட்டுக்களில் பரவை ஈஸ்வரமுடைய மகாதேவர் கோயில் என்றும், பரவை ஈஸ்வரம் உடையார் என்றும், பரவைபுறத்து திருப்பனங்காடுடைய மகாதேவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இறைவனின் இன்றைய பெயர்கள், நேத்ரோதாரகேஸ்வர ஸ்வாமி, புறவார்ப் பனங்காட்டீசன் என்பன. கண்பார்வை வழங்குவதால் நேத்ரோதாரகேஸ்வரன் என்றும், பனங்காட்டில் தோன்றிய இறைவன் என்பதால், பனங்காட்டீசன் என்றும் வழங்கப்படுகின்றது.

**தேவாரத்தலம்.**

திருஞான சம்பந்தரின் தேவாரத்தில் இரண்டாம் திருமுறையில் பதிகம் 189இல் (பண் சீகாமரம்) திருப்புறவார் பனங்காட்டூர் பதிகம் இடம் பெற்றுள்ளது. ''விண்ணமர்ந்தன மும்மதில்களை'', என தொடங்கி பதினோறு பாடல்களின் மூலம் இவ்வூரின் சிறப்பும்

வளமும் குறிப்பிடப்பட்டுள்ளன.

**சோழனின் காதலி பரவை நங்கை**

இவ்வூரில் பரவை நங்கை என்ற பேரழில் வாய்ந்த நாட்டிய மங்கை வாழ்ந்து வந்தாள். இவளே இராஜேந்திர சோழனின் காதலியாக விளங்கினாள். அரசிக்கு இணையான மதிப்பளித்த மன்னன், இவள் பெயரில் அறக்கொடைகள் அமைத்து, தானதர்மங்களைச் செய்து வந்தான். இதற்கு ஆதாரமாக கோயில் கருவறை தென்புறச் சுவரில் இரண்டாம் இராஜேந்திர சோழனின் (கி.பி. 1052 - கி.பி.1064) ஆறாவது ஆட்சியாண்டில் பொரிக்கப்பட்ட கல்வெட்டு திகழ்கின்றது.

பரவை நங்கை பெயராலேயே இவ்வூரும் பரவைபுரம் என அழைக்கப்பட்டது. பின்னர் இதுவே மருவி பனையபுரமாக மாறியது.

**சிபி மன்னன்**

புறவார்ப்பனங்காட்டூர் என்ற சொல்லை பிரித்து பார்த்தால், புறவு+ஆர் என்று வருகிறது. இதன் பொருள் புறா நிறைவுற்ற இடம் ஆகும்.

வேடன் ஒருவனால் வேட்டையாடப் பட்ட, புறாவின் உயிர் காக்க, தன் சதையை அறுத்து தன் உயிரையும் விடத்துணிந்த சிபி மன்னனைத் தடுத்தாட் கொண்ட தலம் இது என புராணக்கதை கூறுகிறது.

**கண்பார்வை தந்த சிவன்**

இறைவனின் திருநாமங்களில் ஒன்று நேத்ரோதாரகேஸ்வரர் என்பது. இதன்



பொருள், கண் கொடுத்த கடவுள் என்பது. பார்வைக் கோளாறு உள்ள எவரும் நம்பிக்கையோடு தஞ்சம் அடைந்தால், குறை நீங்கும் என்பது ஐதீகம்.

**கோயில் அமைப்பு**

இத்திருக்கோயில் எழுபத்தி மூன்று சென்ட் நிலப்பரப்பளவில் எழிலுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. சோழர் காலத்தைச் சார்ந்த இக்கோயிலின் சிற்பங்கள், முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தை சேர்ந்தவை. இதற்குச் சான்றாக, தட்சிணாமூர்த்தி, பிரம்மா, துர்க்கை சிலைகள் இன்றும் காட்சியளித்து வருகின்றன.

இராஜகோபுரம் ஐந்து அங்கணங்களைக் கொண்டு, 60 அடி உயரத்தில் தலைநிமிர்ந்து நிற்கின்றது. இதன் அடிப்பாகத்தில் விஜயநகர காலத்து சிங்கமுகத்தூண்கள் அமைந்துள்ளன.

மூலவர் இறைவன் சதுர லிங்க வடிவில் காட்சிதருகின்றார். இடப்புறத்தில் சற்று தொலைவில் அம்மன் சந்நிதி அமைந்துள்ளது. இறைவியின் பெயர் சத்தியாம்பிகை, மெய்யாம்பிகை, புறவம்மை என்பன.

**மெய்யாம்பிகை**

இவ்வூரில் தீராத பஞ்சாயத்துக்களின் முடிவில் சத்தியாம்பிகை அம்மன் மீது சத்தியம் செய்யச் சொல்வது வழக்கம். தவறாக சத்தியம் செய்தவர் எட்டு நாட்களில் அவர் தண்டனை பெறுவது உறுதி என இன்றும் இவ்வூர் மக்கள் ஆழமாக நம்புகின்றனர். இவை தவிர ஷேத்திர விநாயகர், விநாயகர் சந்நிதி, முருகன் சந்நிதி, ஸ்தல மரமேடை, நவக்கிரக சந்நிதிகளும் உள்ளன.

**தலம், தீர்த்தம்**

இக்கோயிலின் தலமரமாக பனைமரம் திகழ்கின்றது. இன்றும் இக்கோயிலில் உயரமான ஆண் பனை ஒன்றும், அதன் உயரத்திற்கு சற்று கீழே பெண் பனை ஒன்றும் இன்றும் பசுமையாக வாழ்ந்து வருகின்றன. பெண்பனையின் பழம் மருத்துவ குணம் கொண்டது. தல தீர்த்தம் பத்ம தீர்த்தம்.

**அதிசய தேவாரத்தலம்**

சரி, இனி தலைப்பின் விஷயத்திற்கு வரலாம். ஆண்டுதோறும் தமிழ்ப்புத்தாண்டில் முதல் ஏழு நாட்கள் சூரிய உதயத்தின் போது, சூரியன் தன் பொன்னிற ஒளிக்கதிர்களை, நீண்டு வளர்ந்துள்ள இராஜகோபுர நுழைவாயிலில் நுழைந்து, துஜஸ்த்தம்பம், பலிபீடம், நந்தி, கருவறை முன்மண்டபம் இவற்றையெல்லாம் கடந்து கருவறையில் வீற்றிருக்கும் பனங்காட்டீசன் தலைமீது சூரிய


ஒளி படுகின்றது. அதுமெல்லக் கீழிறங்கி இறைவனின் பாதத்தினை அடைகின்றது.

இதே வேளையில், சற்றுத் தொலைவில் உள்ள மெய்யாம்பிகை சந்நிதி கருவறையில் உள்ள அம்மனின் தலைமீது சூரிய ஒளிக்கதிர்கள் விழுகின்றன. அது மெல்லக் கீழிறங்கி, அம்மனின் பாதத்தினை அடைகின்றது.

இந்த அதிசயம் தொடர்ந்து ஏழு நாட்கள் நடைபெறுவதும், சிவனுக்கும், சக்திக்கும் நடப்பதும் வேறெங்குமே காண முடியாத அதிசயம் ஆகும். இது இறையருள் என்றாலும், இதற்கு ஏற்றபடி கட்டிடத்தினையும், கோயிலையும் வடிவமைத்த நம் முன்னோர்களைப் பற்றி நாம் நிச்சயம் பெருமைப்பட்டுக்கொள்ளலாம்.

**அமைவிடம்**

விழுப்புரம் மாவட்டத்தில் அமைந்துள்ள இவ்வூருக்கு விழுப்புரத்திலிருந்து 10கி.மீ வடகிழக்கே செல்ல வேண்டும். அதே போல விக்கிரவாண்டியை அடுத்து தஞ்சாவூர் செல்லும் சாலையில் முதல் ஊராக வருவது பனையபுரம். விழுப்புரத்தில் இருந்து ஏராளமான பேருந்துகள் பனையபுரம் வழியே



செல்கின்றன.

இவ்வூரின் வட கிழக்கே 10 கி.மீ. தொலைவில் திருவக்கரை வக்கிரகாளியம்மன் ஆலயம் , தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் உள்ள அதிசய கல்மரங்களையும் காணலாம்.

இவ்வூரின் மேற்கே சுமார் 6 கி.மீ தொலைவில் தேவாரப்பாடல் பெற்ற திருவாமாத்தூர் உள்ளது.

தமிழகத்தின் பொக்கிஷமான பனையபுரம் புறவார்ப் பனங்காட்டீசனை வழிபட்டு பேறு பெறுவோம்.



**திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் இடத்தில் விளங்கிய அற்புதங்கள் யாவை?**

## ? பதில்

மூன்றாம் வயசிலே உமாதேவியார் கறந்து பொற்கிண்ணத்தில் ஊட்டிய திருமுலைப்பாலை உண்டது.

சிவபெருமானிடத்திலே பொற்றாளமும், முத்துப்பல்லக்கும், முத்துச்சின்னமும், முத்துக் குடையும், முத்துப் பந்தரும், உலவாக்கிழியும், படிக்காசும் பெற்றது.

வேதாரணியத்திலே வேதங்களினாலே பூட்டப்பட்டுத் திருநாவுக்கரசு நாயனாருடைய திருப்பதிகத்தினாலே திறக்கப்பட்ட திருக்கதவு அடைக்கப் பாடினது.

பாலை நிலத்தை நெய்தல் நிலம் ஆகும்படி பாடினது.

பாண்டியனுக்குக் கூனையுஞ் சுரத்தையும் போக்கினது.

சமணர்கள் எதிரே தேவாரத் திருவேட்டை அக்கினியிலே போட்டுப் பச்சையாக எடுத்தது.

வைகையாற்றிலே திருவேட்டைப் போட்டு எதிர் ஏறும்படி செய்தது.

புத்த நந்தியுடைய தலையிலே இடி இடிக்கச் செய்தது.

ஆற்றிலே தாமும் அடியார்களும் ஏறிய ஓடத்தைத் திருப்பதிகத்தினாலே கரை சேர்த்தது.

ஆண்பனைகளைப் பெண் பனைகள் ஆக்கினது.

விஷத்தினால் இறந்த செட்டியை உயிர்ப்பித்தது.

விஷத்தினால் இறந்த பெண்ணினுடைய எலும்பைப் பெண் ஆக்கினது.

# குருகூர் நம்பிக்கன்பரான மதுரகவியாழ்வார்

பெ.இராமநாதபிள்ளை
செயல் அலுவலர்



மதுரகவிகள்



நம்மாழ்வார்

புன்னிரு ஆழ்வார்களில் மதுரகவி ஆழ்வார் ஒருவரே! பெருமாளைப்பாடாமல், பெருமாளின் ஆழ்வாராகிய நம்மாழ்வாரை, ஆச்சாரியாராகக் கொண்டு நம்மாழ்வாரையே பாடிப்பரவியவர்.

இளம் வயதிலேயே, வடமொழி, தென்மொழி நூல்களை நன்கு ஆராய்ந்து அறிந்தவர். இருப்பினும் அவருக்கு மன அமைதி கிடைக்கவில்லை. பல திருக்கோயில்களுக்குச் சென்று, வழிபட்ட பின்னரும் உள்ளத்தில் ஒளி கிடைக்கவில்லை. உயர்ந்த ஞான வாழ்க்கைக்கு நேர்வழி காட்டக்கூடிய ஞான குருவைத்தேடி அன்னாரின் மனம் அலைந்தது.

ஒரு நாள் தியானம் செய்த பிறகு எத்தனை நாள் இவ்வாறு அலைந்து கொண்டிருக்கிறேன். பிறந்த ஊரில் இருந்து வெகு தொலைவு வந்துவிட்டேனே! என நினைத்து தன் ஊர் இருக்கும் திசைநோக்கி பார்த்தார். என்னே அதிசயம்! இளம் சூரியன் நூறாயிரம் கோடி உதித்தது போன்ற அவ்வளவு ஒளி பிரகாசம். அவ்வொளியையே குறிக்கோளாகக் கொண்டு பல ஊர்களைக்கடந்து தாமிரபரணி கரையில் அமைந்துள்ள திருக்குருகூர் என்ற ஆழ்வார் திருநகரிக்கு வந்தார். இதுவரை தென் திசையில் தெரிந்த ஒளி வட திசையில் தெரிந்தது. அத்திசையில் நடந்து கோயிலுக்குள் நுழைந்து குருநாதரை தேடி வந்தவர்தான் 'மதுரகவி என்ற ஞானி'.

பெருமாளை திருக்கோயிலில் கண்டு சேவித்து மகிழ்ந்தார்.

**'ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதுமில்லா**

**வன்றுநு நான் முகன் மதன்னொடு தேவர் உலகோடு உயிர் படைத்தான்**

குன்றம்போல் மணிமாட நீடு
திருக்குருகூர் அதனுள்
நின்ற ஆதிப்பிரான் நிற்க மற்றத் தெய்வம்
நாடுதிரே'

என்பது நம்மாழ்வார் வாக்கு.

கோயிலுக்குள் சென்ற மதுரகவி ஆழ்வார் புளியமரத்தடியில் பத்மாசனத்தில் அமர்ந்து மௌன நிலையில் இருந்த ஞானியைக் கண்டார். கண்கள் மூடியிருந்தன. உடம்பில் ஒளி வீசியது. அதுகண்டுவியந்தார் மதுர கவி. யோக நிலையில் அமர்ந்தவருக்கு உணவு உண்டோ என என்பதனை அறிய ஒரு சிறு கல்லை கீழே போட்டதும் ஞானி கண் விழித்தார். இவருக்கு பேச்சுவருமோ என்பதனை அறிய 'செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தை தின்று எங்கே கிடக்கும்' என வினவ 'அத்தை தின்று அங்கே கிடக்கும்' என்றார். செத்தது என்பது சடப்பொருளான சரீரத்தையும், சிறியது என்பது ஆத்மாவையும் குறிக்கும். சடமாகிய சரீரத்தில் ஜீவாத்மா சம்பந்தப்படுகையில் அது எதை அனுபவித்து எங்கே இருக்கும் என்பது மதுர கவியின் கேள்வி. தெய்வீக ஞானியாகிய நம்மாழ்வார் சரீரத்தைச் சார்ந்த சுக துக்கங்களை அனுபவித்துக் கொண்டு அந்த சரீரத்தையே சார்ந்திருக்கும், என்ற வேதாந்த கருத்தை வெளிப்படுத்தினார். மதுரகவியின் ஐயங்கள் அகன்றன. முதிர் வயதான யோகியான மதுரகவி இளைய ஞானியான நம்மாழ்வாரின் திருவடியில் விழுந்து வணங்கி, அன்னாரின் சீடராகிவிட்டார்.

நம்மாழ்வாரை குருவாகப் பெற்ற மதுரகவி குருநாதராகிய நம்மாழ்வாரிடமிருந்து வேதாந்த இரகசியங்களை எல்லாம் உணர்ந்து கொண்டார். மேலும், தன் சீடனாகிய மதுரகவிக்கு இவ்வுலகில் ஆற்றவேண்டிய கடமைகளைவலியுறுத்தினார்.

''மெய்யன்பனை நோக்கி மேதினியில்
உள்ளோர்க்குச்
செய்ய மறைத்தமிழைச் செப்புவதார் நீ
அல்லால்?''

குருவின் கட்டளைக்கேற்ப மதுரகவி ஆழ்வாரும் தமிழ் மறைகளை (பிரபந்தங்கள்) உலக மக்களுக்கு எடுத்துரைத்தார். மேலும்,

''கண்ணன் கழலினை
நண்ணும் மனமுடையீர்''
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே''

என்ற பாசுரத்தின் பெருமையை உணர்ந்த ஆழ்வாரைப் போற்றினார். குருவையே பகவானாக பாவித்து குருபக்தியே பக்தி நிலையில் உயர்ந்த நிலை என்பது மதுரகவி ஆழ்வாரின் நம்பிக்கை.

''கண்ணிநுன் சிறுத்தாம்பினால்
கட்டுண்ணப்
பண்ணிய பெருமாயன் என்னப்பனில்
நண்ணித் தென்குருகூர் நம்பியென்றக்கால்
அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே''
''தேவுமற்றறியேன் குருகூர் நம்பி
பாவின் இன்னிசைபாடித்திரிவளே''

நம்மாழ்வாரைத்தவிர, பிற தெய்வம் இல்லை என்பது மதுரகவி ஆழ்வாரின் மன உறுதி. தன் குருநாதனாகிய நம்மாழ்வாரே தமக்கு தாயும் தந்தையுமாய் இருந்து ஆட்கொண்ட நிலையை கீழ்கண்ட பாசுரங்களில் காணலாம்.

''நன்மையால் மிக்க நான் மறையாளர்கள்
புன்மையாகக்கருதுவர் ஆதலின்,
அன்னையாய் அத்தனாய் என்னை
ஆண்டிடும்
தன்மையான் சடகோபன் என் நம்பியே''

வேதம் தமிழ் செய்த மாறன் - நம்மாழ்வார் என்பது இவருடைய கருத்து. இத்தகைய உத்தம சீடர் என்றும், குருவோடு சேர்த்து ஆழ்வாராக்கி வைஷ்ணவ சமூகம் நன்றி உணர்வுடன் பராங்குசனே பரம் என்று பற்றினான் வாழியே என்று இவரை வாழ்த்துகிறது. பரமபதத்தில் உள்ள தெய்வச்சுடரே பூமிக்கு வந்து நம்மாழ்வார் என்ற ஞானச்சுடராக ஒளி வீசியது என்பது வைஷ்ணவ சமூகத்தின் நம்பிக்கை ஆகும். இறுதியாக ஆச்சாரியனாகிய நம்மாழ்வாரை தஞ்சமாகக் கொண்டு தெய்வமாக வழிபட்ட மதுரகவி ஆழ்வாரின் குருபக்திக்கு வைஷ்ணவ சமூகம் என்றும் நன்றிக்கடன் பட்டிருக்கும் என்பது உறுதி.

# நீட்டல் அளவுகள்

திருக்கோயில்களின் கட்டுமானம் அந்தந்த தலைமை ஸ்தபதியின் கட்டை விரல் அளவினை கணக்கிட்டு கட்டப்படும் என்கிறார்கள். சிதம்பரம் அளவு, ஆவுடையார்கோயில் அளவு என்றும் பழக்கத்தில் உள்ளது. கோயில்கள் எந்த அளவு கோல் மூலம் நிர்ணயக்கப்பட்டது என்பதற்கு சில கோயில்களில் அளவு கோலை வடித்துள்ளனர், பொதுவாக என்ன வகையான அளவுகள் இருந்தன என்பதை காண்போம்.

| | |
|---|---|
| *8 நுண் மணல்* | *- 1 சிறு கடுகு* |
| *8 சிறு கடுகு* | *- 1 எள்* |
| *8 எள்* | *- 1 நெல்* |
| *8 நெல்* | *- 1 விரல் (முக்கால் அங்குலம்)* |
| *12 விரல்* | *- 1 சாண் (9 அங்குலம்)* |
| *2 சாண்* | *- 1 முழம் (ஒன்றரை அடி)* |
| *4 முழம்* | *- 1 பாகம் (ஆறு அடி)* |
| *6000 பாகம்* | *- 1 காதம்* |
| *4 காதம்* | *- 1 யோசனை* |

கோயில் கட்டுமானங்களில் அடிப்படையாக மிகச்சிறு அளவாக நுண்மணல் எடுத்துக் கொள்ளப்பட்டது ஆனால், இதற்கு கீழாக மிகச்சிறு அளவுகளும் இருந்தன. அவைகள் பெரும்பாலும் பயன் படுத்தியதாகத் தெரியவில்லை. சூரிய, சந்திரன் ஒளிக் கதிர்கள் சுவாமி மேல் படுகின்ற அளவில் சில கோயில்களில் கட்டுமானம் உள்ளது. அத்தகைய கோயில்களின் அளவுகள் மிகச்சிறிய அலகிலிருந்து கட்டுப்பட்டுள்ளன. அவைகளின் விவரம்.

| | |
|---|---|
| *10 கோண்* | *- 1 நுண்ணணு* |
| *10 நுண்ணணு* | *- 1 அணு* |
| *8 அணு* | *- 1 கதிர்த்துகள்* |
| *8 கதிர்த்துகள்* | *- 1 துசும்பு* |
| *8 துசும்பு* | *- 1 முடிநுனி* |
| *8 முடிநுனி* | *- 1 நுண்மணல்* |
| *8 நுண்மணல்* | *- 1 சிறு கடுகு* |

தற்போது இந்த அளவுகள் எல்லாம் பழக்கத்திலிருந்து மறைந்துவிட்டன.

நேரம் குறிக்கும் அளவுகள்:

| | |
|---|---|
| 2 கண்ணிமைக்கும் நேரம் | - 1 நொடி |
| 2 கை நொடி | - 1 மாத்திரை |
| 2 மாத்திரை | - 1 குரு |
| 2 குரு | - 1 உயிர் |
| 2 உயிர் | - 1 ஷனிகம் |
| 12 ஷனிகம் | - 1 வினாடி |
| 60 விநாடி | - 1 நாடி அல்லது நாழிகை |
| 2 1/2 நாழிகை | - 1 ஓரை |
| 3 3/4 நாழிகை | - 1 முகூர்த்தம் |
| 2 முகூர்த்தம் | - 1 சாமம் |
| 4 சாமம் | - 1 பொழுது |
| 2 பொழுது (அ) 60 நாழிகை | - 1 நாள் |
| 15 நாள் | - 1 பக்கம் |
| 2 பக்கம் | - 1 மாதம் |
| 6 மாதம் | - 1 அயனம் |
| 2 அயனம் | - 1 ஆண்டு |
| 60 ஆண்டு | - 1 வட்டம். |

தற்போது நடைமுறையில் 1 நொடி என்பதும் 1வினாடி என்பதும் ஒரே நேரத்தை குறிக்கிறது. ஆனால் 192 நொடி 1 வினாடி என்பது பழைய நேர அளவாகும். (ஒரு மணி நேரத்திற்கு இரண்டரை நாழிகையாகும்.)

எஸ். ஜெயராமன்

துணை ஆணையர்/ செயல் அலுவலர்

# வேலும் மயிலும் துணை

**கந்தர் அனுபூதி - தொடர்ச்சி**

(பேராசிரியர். டாக்டர் சரஸ்வதி இராமநாதன்)



''சென்ற இதழ் தொடர்ச்சி''-

**''ஆடும்பரி, வேல், அணிசேவல் எனப்**

**பாடும் பணியே பணியா அருள்வாய்**

**தேடும் கயமா முகனைச் செருவில்**

**சாடும் தனியா னைசகோ தரனே.''**

**அகர, உகர, மகரம் சேர்ந்தது பிரணவம்.**

ஓம்! மயில், வேல், சேவல் மூன்றையும் இத்தத்துவமாகச் சொல்கிறார். 'கொக்கரக்கோ' என்று சேவல் கூவுவதால் அது நாத தத்துவம். சக்தி, எங்கே இருந்து வந்தது? சிவனிடத்திலிருந்து தான்! அகங்காரம் உள்ளவன் ஊருக்குத் தகுந்தாற்போல் ஆடுவான். ஆடிய சூரபத்மனை ஒரு பகுதி சேவலாக்கிக் கொடியில் கொண்டார். முருகன் ஏறியவுடன் மயில் அழகு பெற்றது. ஆடும் பரி, வேல், 'அணிசேவல்' என்றார். வேல்தான் பரியையும் (மயிலையும்) சேவலையும் ஏற்றது. 'பகை' கெடுத்த வேல் அது. சூரனை இரு கூறாக்கிய வேல் அது. சேவற் கொடி, மயில் வாகனம் இரண்டையும் ஆக்கித்தந்தது வேலின் வெற்றி!

ஆகவே ஆடும்பரி, வேல், அணி சேவல் என்று பாடும் பணியே எனக்குப் பணியாகத்தா.

**'கயமுகாசுரனைக் கொன்ற விநாயகனின் சகோதரனே'**

என்று முருகனை அழைக்கிறார்.

**''தேடும் கயமா முகனைச் செருவில்**

**சாடும் தனி யானை சகோதரனே!''**

ஞானம் என்றால் என்ன? இன்பம் வரும் போது இன்பப் படாமலும், துன்பம் வரும்போது துன்பப் படாமலும் இருப்பதே ஞானம். ஆண்டவனைப் பற்றியே நினைத்துக் கொண்டு இருப்பது ஞானம். படித்த படிப்பால் ஞானம் வருமா? வராது. அகங்காரம் போனால்தான் ஞானம் வரும். நான் என்ற அகங்காரம் போனால் ஞானம் தானே வரும். படித்தவன் படிக்காதவன் என்ற பாகுபாடே கிடையாது. அகங்காரம் இருப்பதால்தான் மறதியே வருகிறது. சிலபேரைப் பார்த்தால் சீக்கிரம் மறந்து போகும். அகங்காரம் இருப்பதால் தான் மறதியே வருகிறது. இராமகிருஷ்ணர் எது பேசினாலும் அதுவே மேற்கோள். நாம் பேசி வருவது எல்லாம் மற்ற நூல்களிலிருந்து மேற்கோள். வேலென்றும் மயிலென்றும் பதியென்றும் பாட வழிகொடு என்று விநாயகனைப் பிரார்த்தித்துக் கொண்டு முருகவேள் அருள் வேண்டிப் பாடுவோம்.

முருகன் என்னும் நாமங்கள் பாடுவோம். முருகா என்னும் நாமங்கள் என்றால், முருகனின் எல்லா பெயர்களையும் குறிக்கும். ஆண்டவன் எல்லாம் தெரிந்தவன். ஆண்டவனுடைய முழு அவதாரம்தான் முருகன். நெற்றிக் கண்ணில் இருந்து வந்தவன். நிலம், நீர், வாயு, நெருப்பு ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களில் சம்பந்தப்பட்டு முருகனுடைய அவதாரம் ஏற்பட்டது. நெருப்பு, அது வந்த ஆகாயம், அது சேர்ந்த சரவணப் பொய்கை நீர், விளையாடிய மண், காற்று, ஆகிய பஞ்சபூதங்கள் சம்பந்தப்பட்டது. பசிக்கிறது என்றால் ஒரு கவலை, பசி இல்லை என்றால் ஒரு கவலை.

யோகம் என்றால் கவலை இல்லாத நிலை. எதையும் அனுபவிக்க வேண்டும் என்றாலும் மனம் ஈடுபட்டு அனுபவிக்க வேண்டும். அவ்வாறில்லை என்றால் யோகம் இல்லை. ஞானிக்கு எல்லாம் போய் விட்டது. அதாவது நான், எனது என்ற எண்ணம் போய்விட்டது. எந்த ஒரு பொருள் வந்து சேர்ந்தாலும் அதனால் துக்கம் தான் வருகிறது. சௌக்கியம் இல்லை. ஆகவே எல்லாம் போய்விட்டது. என்றால், 'நான்', (அகங்காரம்) போய்விட்டது என்று அர்த்தம்.

அதாவது ஒரு பொருளைப் பார்த்தவுடன் ஏற்படுவது ஆர்வம். வாங்கவா, வேண்டாமா என்று அலை பாய்வது மனம். முடிவு எடுக்கப் பண்ணுவது அகங்காரம், புத்திதான் முடிவு செய்கிறது. தூங்கி எழுந்தவுடன் நான், நன்றாகத் தூங்கினேன் என்று கூறுவதே அகங்காரம் தான் எல்லாம்.

முருகா நீயே எனக்கு ஏற்பட்ட நன்மை எது என்று சொல் முருகா என்று கேட்கிறார். நீ உல்லாசன், நீ கவலையற்றவன், நீ யோகி, நீ இதம் தருபவன், நீசல்லாப வினோதன், இந்த நிலைகளை எனக்குத் தந்து என்னை நன்னிலைக்கு உயர்த்து.

**''உல்லாசநிராகுல யோக இதச்**
**சல்லாப வினோதனும் நீயலையோ**
**எல்லாமற என்னை இழந்த நலம்**
**சொல்லாய் முருகா சுரபூபதியே''**

(உல்லாசம்-பரங்குன்றம், நிராகுலம்-செந்தில், யோகம்-பழநி, இதம்-சுவாமிமலை, சல்லாபம்-திருத்தணி, வினோதம்-குன்றுதோறாடல்.)

ஒரு குழந்தை தினமும் இரவு எட்டு மணிக்கு படுக்கு முன் பால் சாப்பிடும் பழக்கம் உள்ளது. ஒரு நாள் பால் குடிக்கும் முன்னர் தூங்கி விடுகிறது. ஆனால் தாய், அதை எழுப்பித் தூக்க கலக்கத்திலேயே பால் கொடுத்து விடுகிறாள். மறுநாள் அந்தக் குழந்தை எழுந்து ''நேற்று நான் பால் குடிக்க வில்லையே'' என்று கூறுகிறது. அதாவது தூங்கிக் கொண்டு எழுந்த தூக்க கலக்கத்திலேயே குடித்ததால் அதற்கு ஞாபகம் இல்லை. நான் என்ற அகங்காரம் சிறிது மறைந்து இருந்தது. அப்படி என்னை மறந்து நிலை தருக என்று வேண்டுவோம்.

முருகா! ஆகாயமா நீ? நீரா நீ? உலகமா நீ? காற்றா நீ? உன் திருவருளை நீஎனக்குக் காட்டிக் கொடு என்பது மூன்றாவது பாடலின் பெருள்.

ஏதாவது ஒரு பொருளைக் காட்டி இது ஆண்டவனா என்று கேட்டால் அது ஆண்டவன் இல்லை. ஆனால் அந்தப் பொருளில் ஆண்டவன் இருக்கிறானா என்று கேட்டால் நிச்சயமாக அந்தப் பொருளில் ஆண்டவன் இருக்கிறான். ஆண்டவன் எங்கும் நிறைந்து இருக்கிறான். ஒரு பத்து ரூபாய் தாளை எடுத்துக் கொண்டோமானால் அது பத்து ரூபாய் என்பது விபரம் தெரிந்த எல்லோருக்கும் தெரியும். அதைப் பத்து ஒரு ரூபாய் தாளாக மாற்ற முடியும் என்பதும் தெரியும். அதுபோல் ஆண்டவனைப் புரிந்து கொண்டவருக்கு மட்டுமே ஆண்டவனைப் பற்றி தெரியும். நமக்கு பதார்த்தம் தெரியும். ஆனால் பரம் தெரியாது. ஆனால் ஞானிக்கு பரம் தெரியும், பதார்த்தம் தெரியாது. எங்கு பார்த்தாலும் ஆண்டவன் இருக்கிறான். முருகப் பெருமான் அன்று உபதேசம் செய்தான். என்றென்றும் நவிலப்படுவதாக உள்ளவன் முருகப் பெருமான்.

- தொடரும்


திருக்கோயில்
திங்கள் இதழ்



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ 10/ |
| ஓராண்டுச் சந்தா | ரூ 120/ |
| ஐந்து ஆண்டுச் சந்தா | ரூ. 500/ |
| பத்து ஆண்டுச் சந்தா | ரூ 1000/ |
| ஆயுட்காலச் சந்தா | ரூ 1500/ |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

**''திருக்கோயில்'' இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!**

**திருத்திய விளம்பரக் கட்டண விவரம் :**

| | |
|---|---|
| 1. பின் பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ 15,000/ |
| 2. முன் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 10.000/ |
| 3. பின் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 7,500/ |
| 4. உள்புறம் முழுப்பக்கம் | ரூ 5,000/ |
| 5. உள்புறம் அரைப்பக்கம் | ரூ 3,000/ |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை 600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

# திருக்குறட்செல்வர் சொன்ன வண்ணம் நின்றவர்

கே.பாலசுந்தரி எம்.ஏ.,

## வாக்குறுதி!

சொன்ன சொல்லை எவ்வளவு இடர்வந்த போதும் விடாது காப்பதே வாக்குறுதியாகும். மன்னன் அரிச்சந்திரன் பொய் பேசாத வாக்குறுதிக்காக தன்னையும் தன் குடும்பத்தையுமே அடிமைப்படுத்தி அல்லல் உற்றான். தசரதன் கைகேயிக்குத் தந்த வாக்குறுதிப்படி தன் மகன் ராமனை காட்டுக்கு அனுப்பினான். சந்தனு மன்னனின் மகன் தேவவிரதன், தன் தந்தை விரும்பிய பெண்ணை மணக்கத் தான் ஆயுள் முழுதும் பிரம்மச்சரியம் அனுசரித்தான். பீஷ்மன் என்ற பட்டப் பெயரும் பெற்றான். ''பீஷ்ம'' என்றால் மேலான என்று பொருள்.

இப்படி மேலான செயல் புரிபவர்களை மகாத்மா என்கிறோம். அண்ணல் காந்திஜி அவர்கள் தன் அன்னைக்கு தந்த வாக்குறுதிப்படி அயல் நாட்டிலும் மது, மங்கை, மாமிசம் தொடாது விரதம் காத்தார். இப்படி சொல்லிய வண்ணம் செய்தவர்கள் அன்று முதல் இன்று வரை உண்டு.

இதைத்தான் சொல்வதைச் செய்யணும்- செய்வதைச் சொல்லணும் என்று பெரியோர்கள் கூறுகின்றனர். சொல்லும் செயலும் ஒன்றாக அமைய மன உறுதி வேண்டும். அப்படி மன உறுதியுடன் சொன்ன சொல்லைக் காக்கத் தன் இளமையையேத் தொலைத்தவர் ஒருவர்.

தில்லையிலே குயவர் குலத்தில் உதித்தவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். தேவர்கள் அமுது உண்ணதான் நஞ்சு உண்ட நமசிவாயன் மீது பக்தி கொண்டவர். அந்த நஞ்சு தான் செய்த தவத்தால் இறைவன் கழுத்திலேயேத் தங்கி விட்டது போலும் என்று எண்ணி மகிழ்ந்து திருநீலகண்டம், திருநீலகண்டம் என்று சொல்லிச் சொல்லி மகிழ்வார். ஆதலால் திருநீலகண்டர் என்றே அழைக்கப்பட்டார்.

கற்புக்கரசியான இளம் மனைவி, இவர்களின் இல்லறம் இனிதே நடந்து வந்தது. இவர் இறைபணியாகத் தன்னால் இயன்ற பணியாக சிவனடியார்களுக்குத் திருவோடு செய்து வழங்கி வந்தார். ஒரு நாள் ஏதோ ஒருகனம் ஏற்பட்டத் தடுமாற்றம் காரணமாக வேறு ஒரு பெண்ணை நாடிவிட்டார் இது மனைவிக்குத் தெரிந்து விட்டது. குமுறினார். கோபம் கொண்ட போதிலும் பணிவிடை எதிலும் குறைவைக்கவில்லை. அடுத்தவளைத் தொட்டவர் என்னைத் தொடலாமா? என் கற்புக்கு அது இழுக்கல்லவோ என்று ஆணுக்கும் கற்பு வேண்டும் என்று அன்றே கூறிய புதுமைப் பெண் அவர். மன்னிக்கும்படி மன்றாடினார் கணவர். எம்மைத் தீண்டாதீர் திருநீலகண்டத்தின் மீது ஆணை என்று ஆணையிட்டார். எம்மைத் தீண்டாதே என்றமையால் பெண்கள் யாரையுமே இனி சிந்தையாலும் தீண்டேன் என்று உறுதி கூறுகிறார் கணவன். இருவருமே பிரம்மச்சரியம் அனுஷ்டிக்கின்றனர்.



திருநீலகண்டர்

கட்டக்கழன்று கீழ் நான்று வீழாமல்
அட்டத்தைக்கூட்டி அடுப்பை அணை கோலி
விட்டத்தைப் பூட்டி மேற்பையைத் தாட்கோத்து
நட்ட மிருக்க நமனில்லை தானே
- திருமந்திரம்

ஆண்டுகள் ஓடின. அயலவர் அறியாது தங்கள் விரதம் காத்தனர். தனக்கு உரிமையற்றப் பெண்களையும் பலவந்தமாகச் சுவைக்கும் ஆண்களுக்கிடையே தனக்கு உரிமையான மனைவியையே அவரது உணர்வுகளுக்கு மதிப்பளித்துத் தொடாது வாழ்ந்தார். உயர்ந்தார். ஆண்குலத்துக்கேப் பெருமை சேர்த்தார். சின்னஞ்சிறு குடிசையில் சத்தியத்தையேத் தடுப்புச்சுவராக அமைத்து வாழ்ந்தார்.

கற்பு நிலை என்று சொல்ல வந்தாய்
இருகட்சிக்கும் அஃது பொதுவில்லைப் போம் - பாரதி

என்ற பாடலுக்கு இவர் தான் உதாரண புருஷனோ?

இவரின் பெருமையை உலகறிச் செய்யத் திருஉளம் கொண்டான் இறைவன். ஒரு நாள் சிவனடியார் வேடம் பூண்டு திருநீலகண்டரிடம் வருகிறான் இறைவன். தான் அயலூர் செல்வதாகவும் தன் திருவோட்டைப் பத்திரப்படுத்தி வைத்துத்தான் கேட்கும் போது தரவேண்டும் என்கிறான். சரி என்று ஒப்புக் கொண்டு பத்திரப்படுத்துகிறார் திருநீலகண்டர். நாட்கள் ஓடின. மீண்டும் சிவனடியார் வருகிறார். தனது திருவோட்டைக் கேட்கிறார். எடுக்க விரைகிறார் திருநீலகண்டர். புன்னகைக்கிறான் இறைவன் அடியார் வேடத்தில். ஆக்கல்- அழித்தல்- காத்தல்- மறைத்தல் அனைத்தும் அவனே அல்லவா? அவன் நினைத்த மாத்திரத்திலேயே திருவோடு மறைந்து விட்டது. திகைக்கிறார்- தேடுகிறார் காணவில்லை என்று கண்ணீர் வடிக்கிறார். அடியாரிடம் தலைகுனிந்து நிற்கிறார். ஓடு காணவில்லை என்று கதறுகிறார் சீறுகிறார் சிவனடியார்.

எம் ஓட்டைத் திருடி விட்டுக் காணவில்லை என்று நாடகமா ஆடுகிறாய் என்று கர்ஜிக்கிறார். மறுக்கிறார் திருநீலகண்டர். வேறு ஓடு தருகிறோம் என்று மன்றாடுகிறார். வேண்டாம் எனது ஓடே வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறார். கடைசியாகச்சற்றே இறங்கி வருகிறார்.

நீ ஓட்டை எடுக்கவில்லை என்று மகவு மீது சத்தியம் செய் என்கிறார் கபடமாக. மகவில்லையே என்கிறார். அப்படி இல்லையேல் மனைவிமீது கைபிடித்துச் சத்தியம் செய் என்கிறார். பழைய சத்தியத்தை எண்ணிக் கைகளைப் பிசைகிறார். திருநீலகண்டர் வழக்கு தில்லைவாழ் அந்தணர்கள் முன்னிலைக்குச் செல்கிறது. ஓட்டைத் திருடவில்லை என்று மனைவி கைப்பிடித்துச் சத்தியம் செய்து திருக்குளத்தில் மூழ்கி எழ வேண்டும் என்று தீர்ப்பு வழங்குகின்றனர். வேறு வழியில்லாது மனைவியைத் தீண்டாத சத்தியம் பற்றிக் கூறுகிறார். ஒரு கோலின் இருமுனைப் பற்றி இருவரும் குளத்தில் மூழ்கி எழுந்தனர். இறைவன் காட்சி அளிக்கிறார். திருநீலகண்டர் திறன் பற்றிக் கூறுகிறார். மீண்டும் இளமைபெற்ற அவர்கள் எல்லா இன்பங்களும் அனுபவித்துத் தம்மை வந்து அடைவீர்கள் என அருள்கிறார்.

**சொல்வது யார்க்கும் எளிய அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்** - குறள்

# "எண்ணச் சிதறல்"

மாசிமாத இதழில் மகாசிவராத்திரியின் பெயர் விளக்கம், பூசனை செய்யத்தக்க பொருட்கள் பற்றி விவரித்துள்ளது சிறப்பாகும். மற்றும் இதழில் பயனுள்ள திருத்தல பெருமையும், திருத்தல உலாக்களாக வழங்கப்பட்டது தித்திக்கும் செய்தியாகும். வாரியாரின் கட்டுரைகளை வெளியிடுமாறு வேண்டுகிறேன்.

- த.புண்ணியகோட்டி, செய்யாறு.

மனித நேயப் பங்களிப்பில் ஆன்மீக முத்திரை என்ற தமிழாகரர் முருகசாமி அவர்களது கட்டுரை, மனித நேயம் என்ற அந்த ஆறெழுத்து மந்திரத்தின் வலிமைதனை தெள்ளத் தெளிவாக, அதுவும் ஞான சம்பந்தரின் ஈடுபாடுகளை நல்லுதாரணமாக்கிப் படைத்திருந்தது. ஆன்மீகம் என்ற அந்த அரிய கோட்பாட்டிற்கும், மனித நேயத்திற்கும் உள்ள ஒற்றுமையையும் பொருள் பட விளக்கியிருந்தார்கட்டுரையாளர்

நன்றி

- இரா.வளையாபதி, தோட்டக்குறிச்சி.

## நினைவலைகள்

# கந்த புராண நுண்பொருள்

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்



எல்லாம் வல்ல வயலூர் எம்பெருமானுடைய திருவருளினாலே கந்த புராணம் என்பது பற்றிச் சில நுட்பமான கருத்துகளை உங்களுக்குச் சொல்லுகிறேன்.

புராணம் என்றால் பழைமை என்பது பொருள். புராதனம் என்ற சொல் புராணம் என்று வந்தது. சில பேர் புராணம் என்றால் புளுகு என்பார்கள். நரம்பில்லாத நாவிலே எதையும் சொல்வார்கள். திருவாசகத்திலே மாணிக்க வாசகர் முதலிலே பாடினது சிவபுராணம். அங்கே புராணம் என்றால் இறைவனுடைய பழைமையைச் சொல்கிறார்கள். ஆகவே புராணம் என்ற சொல்லுக்குப் பழைமை என்பது பொருள்.

வியாஸ பகவான் 18 புராணங்களைப் பாடி அருளினார்கள். சிவபுராணம் 10, விஷ்ணு புராணம் 4, பிரும்ம புராணம் 2, அக்னி புராணம் 1, சூரிய புராணம் 1, ஆக 18. இந்தப் புராணங்கள் எதற்காக என்ற ஒரு வினா எழும். இந்தக் கடிகாரம் கெட்டுப் போனால் இதைப் பழுது பார்க்கின்றவன் பூதக் கண்ணாடி போட்டுக் கொண்டு பார்ப்பான். நுண்ணிய சக்கரங்களைப் பார்க்கின்ற ஆற்றல் இந்தக் கண்களுக்கு இல்லை. ஆகவே நுண்ணிய சக்கரங்களை விரித்துக்காட்டுவது பூதக் கண்ணாடி. அதுபோல வேதங்களிலே வரும் நுண்ணிய தர்மங்களை விரித்துக் காட்டுவது புராணம். புராணம் வேண்டுமா, வேண்டாமா என்பதை நீங்கள் தீர்மானம் பண்ணிக் கொள்ளுங்கள். பழுது பார்க்கிறவனுக்குப் பூதக்கண்ணாடி இன்றியமையாதது போல, வேதத்திலே உள்ள நுண்ணிய தர்மங்களை நமக்கு விரித்துப் புலப்படுத்துவது புராணம். ஒன்று இரண்டு உதாரணத்துக்குச் சொல்கிறேன்.

''சத்தியம் வத'' என்று வேதம் சொல்கிறது. சத்தியத்தைப் பேசு. அந்த ஒரே ஒரு தர்மத்தை நமக்கு விரிவாக எடுத்துக் காட்டுவது ஹரிச்சந்திர புராணம். ''தர்மம் சர''- தர்மத்தைச் செய். அந்த உண்மையை விரிவாக எடுத்துக் காட்டுவது மகாபாரதம். இப்படி வேதத்திலே உள்ள நுண்ணிய தர்மங்களையெல்லாம் விரிவாக எடுத்துக் காட்டுவது புராணம். நன்றாக மனதிலே பதிய வைத்துக் கொள்ளுங்கள்.

பாவங்களுக்கு எல்லாம் மிகப் பெரிய பாவம் நன்றி கொல்வது. கொலை, புலை, களவு முதலான பாவங்களுக்கெல்லாம் பரிகாரம் உண்டு. நன்றி கொன்ற பாவத்துக்குப் பிராயச்சித்தம் கிடையாது. நாம் எந்தப் பாவத்தைச் செய்தாலும் தெய்வம் மன்னிக்கும். நன்றி கொன்ற பாவத்தைத் தெய்வம் மன்னிக்காது.

**''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு''** என்பார் திருவள்ளுவர். புறநானூற்றில் ஒரு பாட்டு,

''நன்றி கொன்றோர்க்கு உய்தி இல்லை என அறம் பாடிற்று'' என்பது புறநானூறு. பசுவின் மடியை அறுத்தவனுக்கும் உய்வு உண்டு. நன்றி கொன்றார்க்கு உய்வில்லை.

அதிலே இரண்டு பிரிவு உண்டு. நன்றி மறப்பது ஒன்று. நன்றி கொல்லுவது ஒன்று. செய்த நன்றியை மறந்து விடுவது ஒன்று. நன்றி மறத்தல் பாவம். நன்றி கொல்வதுதான் மிகப் பெரிய பாவம். அதாவது உதவி செய்தவனுக்கு மேற்கொண்டு கெடுதல் பண்ணுவது நன்றி கொல்லல். நன்றி கொன்றவன் நிச்சயமாக உய்வு பெறமாட்டான் என்ற ஒரே ஒரு தர்மத்தை வலியுறுத்துவது கந்த புராணம்.

சூரபன்மனுக்கு 1008 அண்டங்களையும், 108 யுகங்களையும், வஜ்ஜிர யாக்கையையும் அள்ளி அள்ளி வழங்கிய சிவபெருமானுடைய திருக்குமாரர் முருகப் பெருமான் வந்தவுடனே, சூரபன்மன் அவரை வணங்கி, 'எம்பெருமானே! உனது தந்தையார் கொடுத்த வரம். தேவரீர் தந்தையாலே நான் வாழ்கின்றவன்' என்று நன்றி சொல்லாமல் சிவகுமாரனை அழிக்க முயன்றான். ஆகவே சூரபன்மனை வேலாயுதம் அழித்ததில்லை. அவன் கொன்ற நன்றி அவனை

அழித்துவிட்டது. இப்பொழுது கந்த புராணத்தின் சாரத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நீண்ட நாட்களாகப் படித்தசாரத்தைச்சொல்லுகிறேன்.

கந்த புராணத்தில் ஒரு திருவிருத்தத்திலே வருகிறது.

**ஒன்றொரு பயன்றனை உதவினோர் மனங்**
**கன்றிட ஒருவினை கருதிச் செய்வரேல்**
**புன்தொழில் அவர்க்குமுன் புரிந்த நன்றியே**
**கொன்றிடும் அல்லது கூற்றும் வேண்டுமோ?** என்பது கந்தபுராணத் திருவிருத்தம். கருதிச் செய்வது வேண்டும் என்றே தீங்கு செய்வது, திட்டம் போட்டுச் செய்வது அப்படிச் செய்தவர்களைப் ''புன்தொழில் அவர்க்குமுன் புரிந்த நன்றியே கொன்றிடும் அல்லது கூற்றும் வேண்டுமோ''- அவன் கொன்ற நன்றி மறக்கக் கூடாது. நன்றி பாராட்ட வேண்டும். அதுதான் கந்த புராணத்தினுடைய சாரம்.



சூரபன்மன் பரதார கமனம் செய்யவில்லை. பொய் சொல்லவில்லை. கொடுமைகளைச் செய்யவில்லை. செய்ந்நன்றி கொன்றான். அதனால் குலத்தோடு அழிந்து விட்டான். 18 புராணங்களுக்கும் 4 லட்சம் கிரந்தங்கள். கந்தபுராணம் மட்டும் 1 லட்சம் கிரந்தங்கள். 17 புராணங்களுக்கும் 3 லட்சம் கிரந்தங்கள். இந்த ஒரு புராணம் மட்டும் 1 லட்சம் கிரந்தம். ஆகவே அளவிலும் பெருமை உடையது கந்த புராணம். மதிப்பில் மட்டுமல்ல, அளவிலும்.

அந்த கந்தபுராணம் ஆறு பகுதிகளையுடையது. காந்தா சம்மிதை, ஸூஹ்ருத் சம்மிதை, விஷ்ணு சம்மிதை, பிரும்ம சம்மிதை, வாயு சம்மிதை, சங்கர சம்மிதை. சங்கர சம்மிதை என்பது ஒன்று. அது 12 கண்டங்களை உடையது. அந்த 12 கண்டங்களிலே சிவ ரகஸ்யகண்டம் என்பது ஒன்று. அது 7 காண்டங்களை உண்டயது. அதிலே ஆறு காண்டங்களைக் கச்சியப்பர் தமிழிலே மொழிபெயர்த்து அருளினார். கனவிலே எம்பெருமான் அவருக்குக் காட்சி கொடுத்து அடியெடுத்துக் கொடுத்தார் முதல் வார்த்தையை. ஆண்டவன் கொடுத்த முதலை வைத்துக் கொண்டு,

**''திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்**
**சகட சக்கரத் தாமரை நாயகன்**
**அகட சக்கர வின்மணி யாவுறை**
**விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்''** இதுதான் கந்தபுராணத்தில் முதல் பாட்டு. கொஞ்சம் கடினமாய் இருக்கும்.

காஞ்சிபுரத்தில் ஏகாம்பரநாதர் கோயிலின் சந்நிதானத்திலே விநாயகர் பெயர் விகடசக்கர விநாயகர். ஏன் அப்படிப் பெயர் வந்தது? கோவிலுக்குப் போகிறவர்கள் எல்லாம் தங்கள் சாமான்களை வாசலில் வைத்துவிட்டு போவார்கள், குடை, பாதரக்ஷை போன்றவைகளை, அப்படிச் சிவபெருமானை வணங்கப் போன தேவர்கள் எல்லாம் தங்கள் தங்கள் ஆயுதங்களை வாசலில் வைத்துவிட்டுப் போனார்கள். அதுமாதிரி நாராயணர் தம்முடைய சக்கரத்தை வைத்துவிட்டுப் போய்விட்டார். பிள்ளையாரப்பன் அங்கே உட்கார்ந்திருக்கிறார். அவருடைய திருமார்பிலே இருக்கிற சிரசுமாலை இருக்கிறதே அந்த மாலை அந்தச் சக்கரத்தை வாயிலே கவ்விக் கொண்டது. காக்காய் வடையைக் கவ்விக் கொண்டாற்போல். அவர் வந்து பார்க்கிறார். சக்கரம் இல்லை. பிள்ளையாருடைய சிரசுமாலையிலே இருந்த ஒரு தலை கவ்விக் கொண்டிருக்கிறது. 'சுவாமி! எனக்கு அந்தச் சக்கரம் கிடைக்கும் படியாகப் பண்ணு என்றார். நீயே வாங்கிக் கொள் என்றார். அது எப்படிக் கிடைக்கும். அப்பொழுது அவர் விதூஷகனைப் போலே விகடக் கூத்து ஆடினாராம் பெருமான். எல்லோரும் சிரித்தவுடன் அந்தத் தலையும் சிரித்தது. சக்கரம் கீழே விழுந்துவிட்டது. எடுத்துக் கொண்டுவிட்டார். விகடக்கூத்து ஆடிச் சக்கரத்தைப் பெற்றதனால் அந்த விநாயகர் பெயர் விகடச் சக்கர விநாயகர். அதை முதல் பாட்டாகவைத்து,

**''திகட சக்கரச் செம்முக மைந்துளான்''**

துவங்கியுள்ளார்

- தொடரும்

(செஞ்சொல் உரைக் கோவை நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது)

# உத்தரகோசமங்கை

முனைவர் அ. அறிவொளி

மணிவாசகப் பெருமான் மிகவும் ஈடுபட்டுப் பாடிய ஒரு தலம் உத்தரகோசமங்கை.

இராமநாதபுரத்திலிருந்து தனிச்சாலையில் சென்று அடையக்கூடிய தலம்.

மரகத நடராஜர் மார்கழியில் திருவாதிரை விழாவில் மிகச் சிறப்பான வழிபாட்டுக் குரியவர் இங்கே.

கோசம் என்றால் ஒரு பொருளை உள்ளடக்கிய பகுதி என்ற பொருளாகும்.

அன்மயகோசம் அன்னத்தின் பயனால் வரும் பகுதியாவற்றையும் அடக்கிக் கொண்ட ஒரு பகுதி என்பதாகும்.



பிராணமயகோசம் - மூச்சுக்காற்றை இழுப்பது, அதன் பயனை நுகர்வது நஞ்சான காற்றை வெளியில் அனுப்புவது ஆகிய எல்லாச் செய்கைக்கும் உரிய பகுதிகளை உள்ளடக்கிய பகுதி இந்தப் பெயருக்கு உரியதாகும்.

மனோமயகோசம் - மனத்தின் பிரிவுகளாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கு அந்தக்கரணம் எனும் உட்கருவிகள் பற்றிய தொழில் யாவும் இயங்கும் இடத்தைக் குறிப்பது இந்தப் பெயருக்கு உரியதாகும்.

விஞ்ஞானமயகோசம்- மேற்கூறிய நான்கு உட்கருவிகளில் புத்தி, சித்தம் ஆகிய இரண்டு மட்டும் தனித்து இயங்கும் உணர்வு சிந்தனை ஆகிய செய்கைகளைக் குறிக்கும் ஓர் பகுதிக்கு இந்தப் பெயராகும்.

ஆனந்தமயகோசம்- யோகம், தவம், வழிபாடு முதலிய செய்கைகளால் தெய்வ உணர்வைப் பெறுவதற்குப் பயன்படும். செய்கையும், உறுப்பும் ஆனந்தமயகோசம் என்னும் பகுதியைச்சாரும்.

எளிதில் பொருள் விளங்க வேண்டும் என்பதற்காகக் கோசம் என்பதற்குப் 'பை' என்ற பொருள்கூறினர்.

ஏதாவது ஒன்றை வைத்துக் காப்பது 'பை' ஆகையால் கோசம் செய்வதை இப்படி விளக்கினர்.

கோசம் என்பது எதனோடு தொடர்பு கொள்கிறதோ அந்தப் பெயரைப்பெறும்.

இது போல் வடதிசையோடு தொடர்பு கொண்ட ஒரு பகுதி 'உத்தரகோசம்' என்று பெயர் பெறும்.

உத்தரம் வடக்கைக் குறிக்கும் வடமொழிப் பெயர்.

வடக்கில் உள்ள கயிலாயத்தால் அது புண்ணியமானதிசைஎனப்படுகிறது.

**''புண்ணியத் திசைமுகம் போகிய அந்நாள்''** என்று சிலப்பதிகாரம், வட திசையைப் புண்ணியத் திசைஎன அழைப்பதைக் காண்கிறோம்.

கங்கை, தான் தோன்றிய வடக்குத் திசையை நோக்கி ஓடுவதால் தான் 'காசி' ஒரு புண்ணியதலமாகக் கருதப்படுகிறது.

வட திசை என்பது சிவனின் உருவகம் இமயமலையில் தோன்றும் கங்கை, சிவனின் (நடராசர்) தலையில் தோன்றி வருவதாகவும் காணுகிறோம்.

கங்காதர மூர்த்தி என்று சிவனுக்கு ஒரு பெயர் இதனால் உண்டு.

அது போல் தென்திசையைக் குமரிப் பெண்ணாகப் பராசக்திக்கு உரியதாகக் கொள்ளும் மரபில்தான் 'கன்யாகுமரி' என்ற பெயர் வந்தது.

கன்னியாக இருந்த மீனாட்சியை



இடங்கள் உண்டு.

யோகசாத்திரத்தில் தலைப்பகுதி உச்சம் கயிலாயம் என்று பேசப்படும் - மேலும் தலைப்பகுதி (உத்தரம்) வடக்கு என்றும் கூறப்படும்.

தெற்கு என்பது மூலாதாரம் (கீழ் உள்ளது) இங்கே தோன்றும் குண்டலினி சக்தி பராசக்தி என்று பேசப்படும்.

அது அழுமுனை நாடி வழியாக மேலே ஏறித் தலைக்குப் போகும். இதுவே யோக சித்தியாகும்.

தெற்கே உள்ள பராசக்தியாகிய குமரி வடக்கே உள்ள (தலைப்பகுதி) சிவனுடன் ஐக்கியம் ஆனாள்.

மங்கை என்பது குமரி என்பதைக் குறித்து நின்றது.

வடக்கைக் காதலிக்கும் தெற்கே உத்தரகோசமங்கையாம்.

உத்தரகோசமங்கை செல்வோம். மார்கழித் திருவாதிரையில் நடராசரைக் கண்டு மகிழ்வோம். வாரீர்.

இமயமலையிலிருந்த சுந்தரர் திருமணம் செய்த காட்சியும் இதுவேயாம்.

இதனால் ஓர் அற்புதம் உண்டு. பாண்டி நாட்டிற்குக் கன்னிநாடு என்று ஒரு பெயர் உண்டு.

தென்னாடாகிய கன்னி நாட்டில் உள்ள கோயில்களில் பார்வதி தேவியின் சிலை எல்லாவற்றுக்கும் இரண்டு கைகள் மட்டுமே உண்டு.

மதுரைக்கு வடக்கே இதே தெய்வத்துக்கு நான்கு கைகள் உண்டு.


மீனாட்சி மனிதராகப் பிறந்த தெய்வம் என்பதை இது காட்டுகிறது.

உத்தரகோசமங்கையில் உள்ள தாயும் கன்னியே ஆவாள்.

அவள் வடக்கே உள்ள சிவனை மனத்தில் வரித்து இருந்து அவனோடு இணைவதால் உத்தரகோசமங்கை என்று பெயர் வந்தது.

கடவுளுக்கு இருக்கும் இப்பெயர் மெல்ல மெல்ல ஊருக்கும் வந்துவிட்டது.

இப்படி ஊர்ப்பெயர் கோயிலுக்கும் கோயில் பெயர் ஊருக்கும் மாறிய பல



## பிரும்மாவிற்கு வேத உபதேசம் செய்த திருநாராயணபுரம்

# அருள்மிகு வேதநாராயணப்பெருமாள்



திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் வட்டத்தில், தொட்டியத்திலிருந்து காட்டுப் புத்தூர் செல்லும்சாலையில் - அரசலூர் வழி காட்டியிலிருந்து தெற்கே 2 கிலோ மீட்டர் தொலைவில், காவிரியின் வட கரையில் எழில் சூழ்ந்த சிறிய கிராமமான திருநாராயணபுரத்தின் மையப் பகுதியில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது அருள்மிகு வேதநாராயணப் பெருமாள் திருக்கோயில்.

வேதநாராயணப் பெருமாள், நான்கு வேதங்களைத் தலையணையாகக் கொண்டு, ஆதிசேடன் மீது பள்ளிகொண்டு, நாபிக் கமலத்தில் உதித்த நான்முகனுக்கு வேதங்களை உபதேசித்துக் கொண்டிருக்கின்றார் இத்திருத்தலத்தில்.

### திருத்தலம் தோன்றிய சிறப்பு

முற்காலத்தில் மகாபலி சக்கரவர்த்தி வானவராயர் என்ற அரசர், தமது அரசாட்சியை விரிவுபடுத்தும் நோக்கத்துடன், மைசூரை நோக்கிப் படையுடன் சென்று கொண்டிருந்தார். இரவு நேரம் நெருங்கியதால், அக்காலத்தில் மண்மேடாகக் கிடந்த இப்பகுதியில் தமது வீரர்களுடன் தங்கிவிட்டார். அந்த இரவுப் பொழுதில், தமது உறக்கத்தினூடே உதித்த கனவில், திருமால் காட்சியளித்து, தாம் இப்பகுதியில் பூமிக்கடியில் பூபதமாய் இருக்கின்றேன். என்னை மேலே எழுந்தருளச் செய்து எனக்குண்டான தினசரி வழிபாடு மற்றும் உற்சவங்கள் முதலான விழாக்களை ஏற்படுத்திவிட்டு மைசூர் சென்றால், அங்குள்ள மன்னன் பரமபதமடைந்துவிடுவார் எனவும், அவருக்குப் பின் உம்மை மைசூர் மன்னராக அம்மக்கள் ஏற்றுக் கொள்வர் எனவும் உரைத்து மறைந்து விட்டார். திருமால் தமது கனவில் உரைத்ததைப் போல, மாமன்னன் தமது வீரர்கள் மூலமாக, பூமிக்கடியிலிருந்து பெருமாளை மேலே கொணர்வித்து, இத்திருநாராயணபுரத்தில் திருக்கோயில் அமைத்து தினசரி வழிபாடு முதலான விழா நிகழ்ச்சிகளை ஏற்படுத்தி அதற்காக இக்கிராமத்தையே தானமாகக் கொடுத்துச் சென்றதாக, செவி வழிச் செய்திகள் மூலம் அறிய முடிகிறது.

### அரையருக்குக் காட்சியளித்த சிறப்பு.

மகாபலி சக்கரவர்த்தியால் உருவாக்கப் பட்ட இத்திருத்தலமானது அக்காலத்தில் பனை ஓலையால் வேயப்பட்டிருந்தது. இத்தலத்திற்கு, பிள்ளைத் திருநரையூர் அரையர் பெருமான் தமது குடும்பத்துடன் பெருமாளை வழிபாடு செய்ய வந்துள்ளார். அவ்வேளையில் பெருமாள் குடிகொண்டிருந்த திருக்கோயிலின் மேற் கூரையில் திடீரென்று தீ பற்றிக் கொண்டது. இத்தீயினால் பெருமாளின் திருமேனி பாதித்துவிடக்கூடாது எனக் கலங்கிய அரையர் தமது துணைவியார் மற்றும் ஆறு குழந்தைகளுடன் பெருமாளின்



திருமேனியை ''தீ'' தீண்டிடாவண்ணம் அவரை அணைத்தவாறு குடும்பத்துடன் மோட்சமடைந்தனர் என்பதை, ''பிள்ளைத் திருநரையூர் அரையர் திருமேனியை உபேசித்தாற்போல்'' என்ற ''ஸ்ரீவசனபூசனம் நூலில் 84- ஆம் சூர்னையில் குறிப்பிட்டுள்ள வாக்கியத்தின் மூலம் அறியலாம். இதன் மூலம் அரையருக்கு மோட்சம் அருளியதால் இத்திருத்தலமானது பிள்ளைத் திருநரையூர் அரையரின் அபிமான தலமாகப் போற்றப்படுகிறது.

**பிரகலாதனுக்கு அருளிய பெருமை.**


நாராயணனான திருமாலின் பக்தனாக விளங்கிய, பாலகன் பிரகலாதன். இரணியனால் மிகவும் துன்புறுத்தப்பட்டான். பிரகலாதனை காப்பாற்ற திருமால், நரசிம்ம அவதாரம் எடுத்துக் கடுஞ்சினத்துடன் இரணியனை அழித்தார். இரணியன் வதம் முடிந்ததும், அக் கொடுஞ்சீற்றம் தணிய, பிரகலாதனை நோக்கி வேண்டும் வரம் கேள் என்றார். பெருமாளைத் தான் சாந்த வடிவில் காணவேண்டுமெனக் கோரினான் பாலகன் பிரகலாதன். அவனது கோரிக்கையை ஏற்றுத் தன்னை சோழவள நாட்டின் மேற்குப் பகுதியில் காவிரியின் வடகரையில் அமைந்துள்ள திருநாராயணபுரத்தில் என்னை நாடி வந்து சாந்த வடிவில் கண்டு அருள்பெறுக என அருளியுள்ளார் பெருமாள்.

அதற்கு எடுத்துக்காட்டாக இங்கு பள்ளிக் கொண்டுள்ள பெருமாளின் பாதத்தின் கீழ் பிரகலாதனின் சிலை அமைந்துள்ளது.

**நான்முகனுக்கு வேதம் உபதேசம் செய்த சிறப்பு.**

ஆதியில், உலகத்தில் அனைத்தையும் தம்மால் மட்டுமே படைக்கமுடியும் அவ்வலிமை தனக்கு மட்டுமே உள்ளதென்று கூறி, நான்முகன் கர்வமிக்கவனாக விளங்கினான். நான்முகனின் அகந்தையை அழிக்கத் தம்மாலும் - உருவாக்க முடியும் என்பதை உணர்த்தும் முகமாக விகாரமான உருவம் ஒன்றை உருவாக்கி நான்முகனை நோக்கி அனுப்பிவைத்துள்ளார். இவ்விகாரமான உருவத்தைக் கண்டு அஞ்சி நடுங்கிய நான்முகன் பெருமாளை அணுகி விபரம் கேட்டுள்ளான். படைப்புத் தொழிலானது உன்னுடையதாகயிருக்கும் போது வேறு எவரால் இவ்விகார உருவத்தை உருவாக்கியிருக்க முடியுமென வினா எழுப்பினார் பெருமாள். ''ஆம் என்னைத் தவிர வேறு யாராலும் படைக்க முடியாது'' என்று அகந்தையுடன் மறு மொழி உரைத்தான் நான்முகன். உடனே பெருமாள், யார் எத்தொழில் செய்தாலும் அதில் அகந்தை ஏற்படக்கூடாது தொழிலில் பக்தி மட்டுமேயிருக்க வேண்டுமென்ற கருத்தை நான்முகனுக்கு உணர்த்தி, பெருமாள் தம்மால் படைக்கப்பட்ட விகார உருவத்தை மறைத்துவிட்டார்.

இதன் மூலம் நான்முகன் நல்லறிவு பெற்று தமக்கு வேத உபதேசம் செய்யவேண்டுமென பெருமாளிடம் வேண்டியதின்படி, தாம் பூலோகத்தில் காவிரியின் வடகரையில் வேதநாராயணன்



என்ற திருப்பெயருடன் எழுந்தருளும் காலத்தில், உமக்கு எம்முடைய நாபிக் கமலத்திலிருந்து (தொப்புள் கொடி) வேத உபதேசம் செய்கிறேன் என்றருளினார்.

அவ்வாறே, பெருமாள் திருநாராயணபுரம் என்னும் இத்தலத்தில் வேதநாராயணராக எழுந்தருளி தமது நாபிக் கமலத்தில் உதித்த நான்முகனுக்கு வலதுகரத்தால் வேத உபதேசம் செய்து வருகிறார். இதன் காரணமாக, இத்தலமானது 'குரு' வின் இருப்பிடமாகவும், வேதங்களைத் தலையணையாகக் கொண்டிருப்பதால் புதனுக்கு அதிபதியாகவும் விளங்குகிறார். எனவே இத்தலமானது குரு மற்றும் புதனுக்கு அதிபதியாக விளங்கி வருகிறது.

**கருணை வடிவில் கம்பத்தடி ஆஞ்சநேயர்.**

சத்தியத்தை நிறைவேற்ற, இத் திருத்தலத்தின் நுழைவுவாயிலில் ஆஞ்சநேயப் பெருமான் எழுந்தருள்புரிகிறார். இப்பகுதி மக்கள் தங்களுக்குள் ஏற்படும் உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் கம்பத்தடியான் முன்னிலையில் சத்திய வாக்களித்துக் கொள்கின்ற வழக்கம் மரபாக இருந்து வருகிறது. மேலும், இத்தலமானது, கல்வி, தொழில், திருமணம் மற்றும் குழந்தைச் செல்வங்கள் பெறுவதற்கான பிரார்த்தனைத் தலமாகவும்விளங்கி வருகிறது.

தற்போதைய அமைப்பான இத்திருக் கோயில், நாயக்க மன்னர்களால் பதினைந்தாம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது என்பதை கல்வெட்டுக் குறிப்புகள் மூலம் அறியமுடிகிறது.

**காவிரியின் வடகரையில் அமைந்துள்ள திருமாலின் பஞ்சதலங்களின் சிறப்பு**

சோழ வளநாட்டின் காவிரி வடகரையில் அமைந்துள்ள வைணவ தலங்களுள் மிகப் பழமையும் பெருமையும் வாய்ந்தவைகள் அய்ந்தாகும். அவைகள்,

1. அருள்மிகு வேதநாராயணப் பெருமாள் திருக்கோயில். திருநாராயணபுரம். தொட்டியம் வட்டம், திருச்சி மாவட்டம்.

2. அருள்மிகு உத்தமர் திருக்கோயில் (மும்மூர்த்தி தலம்) பிச்சாண்டார் கோயில். திருச்சி.

3. அருள்மிகு சுந்தரராசப்பெருமாள் திருக்கோயில். அன்பில். இலால்குடி வட்டம்.

4. அருள்மிகு அப்பக்கூத்தார் திருக்கோயில். கோயிலடி, (கல்லணைக்கு அருகிலுள்ளது)

5. அருள்மிகு அரங்கநாதசுவாமித் திருக்கோயில். திருவரங்கம், திருச்சி - 6

மேற்கண்ட அய்ந்து திருத்தலங்களையும் ஆண்டுதோறும் அய்ப்பசி 'துலா' இராசியன்று வரிசைப்படி நீராடி வழிபாடு செய்தால் பக்தர்கள் தங்களது வாழ்வில் அனைத்து வளங்களையும் பெறுவர் என்பது மெய்யாகும்.


**திருக்கோயில் வழிபாட்டு முறைகள்.**

இத்திருக்கோயிலில் தினசரி நான்கு கால வழிபாடுகள், பாஞ்சராத்ர ஆகமவிதிகளின்படி நடைபெற்று வருகின்றன. மற்றும், மாதாந்திர விசேட வழிபாடுகள், மார்கழித் திங்களில் இராப்பத்து, பகல்பத்து விழாக்களுடன் வைகுண்ட ஏகாதசிப் பெருவிழாவும், வைகாசித் திங்களில் வருடாந்திர பெருவிழாவும் வைகாசித் திருவோண நட்சத்திரத்தில் திருத்தேர் பெருவிழாவும் சிறப்பாக நடைபெறுகின்றது. திருவரங்கத்தில் பள்ளி கொண்டருளும் திருவரங்கப் பெருமாளுக்கு நடத்தப்படும் வழிபாட்டு முறைகளையே, இத்தலத்தில் பள்ளிக் கொண்டுள்ள வேதநாராயணப் பெருமாளுக்கும் பின்பற்றப்பட்டு வரப்படுகிறது.

இத்தகு சிறப்புமிக்க வேதபுரி ஆதிரங்கம் என்றழைக்கப்பட்டு வருகின்ற திருநாராயண புரத்தில் பள்ளி கொண்டுள்ள ''வேத நாராயணனை'' வணங்கி வழிபட்டு, தங்கள் வாழ்வில் அனைத்து வளங்களையும் நலங்களையும் பெற்றிட வேண்டுகின்றோம்.




# அருள்மிகு உமையம்மை 108 போற்றிகள்



1. ஓம் அகர முதலென ஆனாய் போற்றி
2. ஓம் அகில உலகுக்கும் அன்னாய் போற்றி
3. ஓம் அஞ்செஞ் சீரடி அமுதே போற்றி
4. ஓம் அடியவர்க் கின்பம் அருள்வாய் போற்றி
5. ஓம் அடியார் உளத்துள் விளக்கே போற்றி
6. ஓம் அடியார் வினைகெட ஆள்வாய் போற்றி
7. ஓம் அணுகாதவர்க்குப் பிணியே போற்றி
8. ஓம் அணுவிலும் சிறிய அணுவே போற்றி
9. ஓம் அண்டம் யாவையும் பூத்தாய் போற்றி
10. ஓம் அரவ முடியில் இருப்பாய் போற்றி
11. ஓம் அருள்சூல் கொண்ட அம்மா போற்றி
12. ஓம் அருள்நிறை கடலே அமுதே போற்றி
13. ஓம் அழகன் முருகனை அளித்தாய் போற்றி
14. ஓம் அறத்தின் வடிவே அருளே போற்றி
15. ஓம் அறிவும் மகிழ்வும் அருள்வாய் போற்றி
16. ஓம் அறுவர்க்கு இளைய நங்காய் போற்றி
17. ஓம் ஆகமப் பொருளாய் நிறைந்தாய் போற்றி
18. ஓம் ஆசைதீரக் கொடுப்பாய் போற்றி
19. ஓம் ஆடகத் தாமரை அணங்கே போற்றி
20. ஓம் ஆடல் கண்டருளிய அணங்கே போற்றி
21. ஓம் ஆதி முதலே அருளே போற்றி
22. ஓம் ஆயிரம் திருப்பெயர் உடையாய் போற்றி
23. ஓம் ஆரா அமுதம் ஆனாய் போற்றி
24. ஓம் ஆருயிர் வளர்க்கும் மருந்தே போற்றி
25. ஓம் ஆலம் அமுதுசெய் அன்னாய் போற்றி
26. ஓம் ஆறாதாரத்து அமர்ந்தாய் போற்றி
27. ஓம் இமயமடக்கொடித் தாயே போற்றி
28. ஓம் இமவான் பெற்ற தவமே போற்றி
29. ஓம் இரவாய்ப் பகலாய் விரிந்தாய் போற்றி
30. ஓம் இருமையும் உதவும்எம் தாயே போற்றி
31. ஓம் ஈசர் பாகத்து உறைவாய் போற்றி
32. ஓம் உயிர்க்கு உயிராம் உணர்வே போற்றி
33. ஓம் உலகெலாம் ஈன்ற உமையே போற்றி
34. ஓம் உள்ளக் கோயில் விளக்கே போற்றி
35. ஓம் எல்லா உலகமும் ஆனாய் போற்றி
36. ஓம் ஏதம் அகற்றும் மாதே போற்றி
37. ஓம் ஏழிசைவல்லி எந்தாய் போற்றி
38. ஓம் ஒளிமதிச் செஞ்சடை உடையாய் போற்றி
39. ஓம் ஒளிரும் ஒளிக்கு இடமே போற்றி
40. ஓம் ஒன்றில் விரிந்த பலவே போற்றி
41. ஓம் ஓங்கார உட்பொருள் உமையே போற்றி
42. ஓம் ஓசைஒலிஎலாம் ஆனாய் போற்றி
43. ஓம் ஓத அரிய உணர்வே போற்றி
44. ஓம் ஐங்கரன் தன்னை அளித்தாய் போற்றி
45. ஓம் ஐந்தெழுத்துட் பொருள் ஆனாய் போற்றி
46. ஓம் ஐந்தொழில் இயற்றும் அன்னாய் போற்றி
47. ஓம் கடவுள் மணியே கதிரே போற்றி
48. ஓம் கண்ணார் அமுதக் கடலே போற்றி
49. ஓம்கண்ணே கண்ணின் மணியே போற்றி
50. ஓம் கயிலைப் பதமருள் கருணை போற்றி
51. ஓம் கருமையில் அழகிய கலையே போற்றி
52. ஓம் கரும்பின் இனிய மொழியாய் போற்றி
53. ஓம் கற்பகத் தருவே கலையே போற்றி
54. ஓம் கன்னியர் நோன்பு உகப்பாய் போற்றி
55. ஓம் காவியங் கண்ணி உமையே போற்றி
56. ஓம் கானகம் உகந்த காளி போற்றி
57. ஓம் குவளை மலர்க்கண் கொண்டாய் போற்றி


சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் : திருமிகு **த. பிச்சாண்டி,** இ.ஆ.ப., சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்
: தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034. தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் (கூ.பொ.) : ம. தேவேந்திரன், பி.எஸ்சி., பி.எல்., உதவி ஆணையர்
அச்சிடுவோர் : குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை -21. தொலைபேசி : 25967929

58. ஓம் கொன்றை வேய்ந்த குழலாய் போற்றி
59. ஓம் சங்கரனார் மனை விளக்கே போற்றி
60. ஓம் சிந்தை குடிபுகும் சிவையே போற்றி
61. ஓம் சிறக்கும் கமலத் திருவே போற்றி
62. ஓம் சீர்சால் வரமருள் தாயே போற்றி
63. ஓம் தமிழின் இனிய சுவையே போற்றி
64. ஓம் தாருகன் பேருரம் கிழித்தாய் போற்றி
65. ஓம் திருநீற்று ஒளியே திறமே போற்றி
66. ஓம் தீபச்சுடராய்த் திகழ்வாய் போற்றி
67. ஓம் தூயர் உளத்தில் இருப்பாய் போற்றி
68. ஓம் தேடற்கு அரிய நிதியே போற்றி
69. ஓம் தோன்றாத் துணைக்கோர் துணையே போற்றி
70. ஓம் நஞ்சமு தாக்கிய நங்காய் போற்றி
71. ஓம் நறுமா மலர்ச்சடையாய் போற்றி
72. ஓம் நாயகி நாரணி நான்முகி போற்றி
73. ஓம் பஞ்சினும் மெல்லடிப் பாவாய் போற்றி
74. ஓம் பண்ணார் இன்தமிழ்ப் பாவாய் போற்றி
75. ஓம் பழமறைப் பொருளே பயனே போற்றி
76. ஓம் பனிமால் இமயப் பிடியே போற்றி
77. ஓம் பாசம் அங்குசம் உடையாய் போற்றி
78. ஓம் பாடுவார் பாடல் உகப்பாய் போற்றி
79. ஓம் பாலினும் நன்மொழிப் பாவாய் போற்றி
80. ஓம் பிறவிப் பிணிக்கோர் மருந்தே போற்றி
81. ஓம் பிள்ளைச் செல்வம் அருள்வாய் போற்றி
82. ஓம் புவித்தலம் அனைத்தும் பூத்தாய் போற்றி
83. ஓம் பூதம் ஐந்தாய் விரிந்தாய் போற்றி
84. ஓம் மகிடன் தலைமேல் அந்தரி போற்றி
85. ஓம் மங்கல மங்கையர் தவமே போற்றி
86. ஓம் மஞ்சள் குங்குமம் காப்பாய் போற்றி
87. ஓம் மணியே மணியின் ஒளியே போற்றி
88. ஓம் மருளில் விளைந்த தெருளே போற்றி
89. ஓம் மலரே மலரின் மணமே போற்றி
90. ஓம் மலைவளர் காதலி உமையே போற்றி
91. ஓம் மலையவன் மகளாய் உதித்தாய் போற்றி
92. ஓம் மரகத மணியின் ஒளியே போற்றி
93. ஓம் முத்தலைச் சூல முதல்வி போற்றி
94. ஓம் முப்பத் திரண்டறம் வளர்ப்பாய் போற்றி
95. ஓம் முப்புரம் எரித்த முதல்வி போற்றி
96. ஓம் முழுவதும் ஈன்ற முதலே போற்றி
97. ஓம் மூவா முகுந்தற்கு இளையாய் போற்றி
98. ஓம் மோகம் அழிக்கும் முதல்வி போற்றி
99. ஓம் யாவர்க்கும் மேலை இறைவி போற்றி
100. ஓம் யாழினும் இனிய மொழியாய் போற்றி
101. ஓம் வஞ்சகர் நெஞ்சில் வாராய் போற்றி
102. ஓம் வம்பில் பழுத்த கனியே போற்றி
103. ஓம் வாசமலர் எலாம் ஆனாய் போற்றி
104. ஓம் வெற்றி வெல்போர்க் கொற்றவை போற்றி
105. ஓம் வேண்ட முழுதும் தருவாய் போற்றி
106. ஓம் வேண்டுவோர் வேண்டுவ ஈவாய் போற்றி
107. ஓம் வேதத் தொடையின் பயனே போற்றி
108. ஓம் வேதநாயகியே போற்றி போற்றி.





28.2.2007 புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் வேலூர் மாவட்டம், காந்திநகர் கழிஞ்சூர், அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் வளாகத்தில் உலோகத்திருமேனிகள் பாதுகாப்பு மையம் திறப்பு விழா வெகு விமர்சியாக நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், திரு.த. பிச்சாண்டி, இ.ஆ.ப., சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை திரு. காந்தி, எம்.எல்.ஏ.,, திரு. தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப. மாவட்ட ஆட்சித்தலைவர் வேலூர், திரு. துரைசிங்காரம், தொழிலதிபர் காட்பாடி, திரு. கோ. பக்கிரிசாமி. பி.எசி., பி.எல்., இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, வேலூர், திரு. ஆ. வீரபத்திரன், பி.ஏ., பி.எல்., உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, வேலூர், திரு. ஜோதி, செயல் அலுவலர் மேற்படி திருக்கோயில் மற்றும் ஆன்றோர், சான்றோர் கலந்து கொண்டனர்.

பதிவு எண் : TN / PMG / (CCR) / 707 / 06-08 / WPP No. 451/06-08



# அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோயில், மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்
# சித்திரைப் பெருந்திருவிழா

மண்டூக முனிவருக்கு சாப விமோசனம் கொடுக்கும் பொருட்டும், ''**சுந்தரத்தோளுடையான்**'' என்று அருள்மிகு ஆண்டாள் மங்களாசனம் செய்து சுந்தரத் தோள்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை ஆண்டாள் சாற்றிக் கொண்ட திருமாலையை ஏற்றுக்கொள்ளும் பொருட்டும். சுந்தரராஜப் பெருமாள், ''கள்ளர் திருக்கோலத்துடன்'' மதுரையம்பதிக்கு எழுந்தருளி நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டபடி விழாக் கொண்டருளுகிறபடியால் பக்தகோடிகள் விழாவில் கலந்து கொண்டு வேண்டுவோருக்கு வேண்டுவன வழங்கும் எம்பெருமானை தரிசிக்குமாறு திருக்கோயில் சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**நிகழ்ச்சி நிரல்**

| தேதி | கிழமை தேதி | தமிழ் மாதம் | விபரம் |
|---|---|---|---|
| *28.4.2007* | சனிக்கிழமை | சித்திரை 15ம் நாள் | திருவிழா ஆரம்பம் 1ம் திருநாள் |
| *29.4.2007* | ஞாயிற்றுகிழமை | சித்திரை 16ம் நாள் | 2ம் திருநாள் |
| *30.4.2007* | திங்கள் | சித்திரை 17ம் நாள் | 3ம் திருநாள் மாலை 7.00 மணி அளவில் அருள்மிகு கள்ளழகர் மதுரைக்கு எழுந்தருளல் |
| *1.5.2007* | செவ்வாய் | சித்திரை 18ம் நாள் | மாலை மதுரை தல்லாகுளத்தில் எதிர் சேவை |
| *2.5.2007* | புதன் | சித்திரை 19ம் நாள் | காலை 5.30 மணி முதல் 6.30 மணிக்குள் அருள்மிகு கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளல் இரவு வண்டியூர் அருள்மிகு வீரராகவப் பெருமாள் கோயில் போய் சேருதல் |
| *3.5.2007* | வியாழன் | சித்திரை 20ம் நாள் | சேஷ வாகனத்தில் எழுந்தருளி தேனூர் மண்டபம் போய் சேருதல்<br>பகல்- தேனூர் மண்டபத்தில் மண்டூக மகரிசிக்கு சாப விமோசனம் கொடுத்தல்.<br>பிற்பகல்- கெருட வாகனத்தில் எழுந்தருளி இராமராயர் மண்டபம் வந்து சேருதல்.<br>இரவு- இராமராயர் மண்டபத்தில் தசாவதார சேவை. |
| *4.5.2007* | வெள்ளி | சித்திரை 21ம் நாள் | அனந்தராயர் பல்லக்கில் எழுந்தருளி இராமநாதபுரம் ராஜா சேதுபதி மண்டபம் வந்து சேருதல்<br>இரவு- மேற்படி மண்டபத்தில் பூப்பல்லக்கு அலங்காரம் |
| *5.5.2007* | சனி | சித்திரை 22ம் நாள் | காலை - பூப்பல்லக்கில் அழகர் மலைக்கு எழுந்தருளல்<br>இரவு - அப்பன்திருப்பதி வந்து சேருதல் |
| *6.5.2007* | ஞாயிறு | சித்திரை 23ம் நாள் | காலை 9.00மணி அளவில் அருள்மிகு கள்ளழகர் அழகர்மலைக்கு வந்து சேருதல் |

அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகிறது. திருப்பணிக்கு நன்கொடை வழங்கி அருள்மிகு பெருமாளின் அருள்பெற கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி**

துணை ஆணையர்/நிர்வாக அதிகாரி,
அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில்,
அழகர்கோயில், மதுரை மாவட்டம்.

**ஆர். பாண்டியன்**
தலைவர் அறங்காவலர் குழு

**மா.புகழேந்திரன்,**
துணை ஆணையர்/ நிர்வாக அதிகாரி,

**அறங்காவலர்கள்**

வி.கோபால்
ஜி.திலகராமுகங்காதரன்
ஆர்.பன்னீர் செல்வம்,
டி.தெய்வேந்திரன்